

ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14.

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலைசதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (2-8-66) இதழ் 173

பராபவ ஆடி 17 ரபீ: ஆகி 14 செவ்வாய்க்கிழமை



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு 14

சுகாதார சேவை அபிவிருத்தி

# காங்கேசன்துறைக்கு ரூ. 30 லட்சம் ஒதுக்கீடு

## யாழ்ப்பாண ஆஸ்பத்திரியும் விஸ்தரிக்கப்படும்

கொழும்பு, திங்கள்

**காங்கேசன்துறையில் சுகாதார சேவை அபிவிருத்திக்கென ரூபா 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.**

சுகாதாரசேவை விஸ்தரிப்புக்கென அரசாங்கம் ஒதுக்கியுள்ள ஒரு கோடியே 30 லட்சம் ரூபாவில் மேற்கண்ட தொகை காங்கேசன்துறைக்கு கிடைக்கவிருக்கிறது.

இந்த 30 லட்சம் ரூபாவில் காங்கேசன்துறையில் ஒரு ஆஸ்பத்திரி கட்டும் திட்டமும், காங்கேசன்துறை காசநோய் ஆஸ்பத்திரி சீரமைப்புத் திட்டமும் அடங்கியுள்ளது. இந்த திட்டங்கள் 1970-ம் வருடத்தில் பூர்த்திபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி விஸ்தரிப்பு வேலைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் இடம் அளிக்கப்பட்டுள்ளது. திருக்கோணமலை பருத்தித்துறை ஆஸ்பத்திரிகளுக்கு நிர்வாக பகுதிக்கட்டடங்கள் கட்டப்படவிருக்கின்றன.

சுகாதார சேவைக்கு இந்த முறை அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் வடக்கு கிழக்கு மாகாணங்களுட்பட மற்ற மாகாணங்களிலுள்ள ஆஸ்பத்திரிகள் பல வசதிகளைப் பெறவிருக்கின்றன.

## பிரதமர் அடுத்தமாதம் லண்டன் செல்வார்

கொழும்பு, திங்கள்

அடுத்தமாதம் லண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதம மந்திரிகளின் மகாநாட்டில் பிரதமர் திரு. டட்லிசேனநாயகாவும் கலந்துகொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

சென்றவருடம் நடந்த காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் பிரதமர் திரு. டட்லிசேனநாயகா கலந்துகொள்ளவில்லை. அச்சமயம் உள்நாட்டில் அதிக வேலை இருந்ததே இதற்குக்காரணமாகும்.

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் வியட்நாம் பிரச்னையை பிரதமர் கிளப்புவாரென்றும் தெரிகிறது. தென்வியட்நாமுக்கு இலங்கையின்சார்பில் டாக்டர் ஜி. பி. மலலசேகரா தலைமையிலும் சேர் சென ரத்குணவர்த்தன தலைமையிலும் சென்ற இரண்டு கோஷ்டிகளும் சமர்ப்பித்த அறிக்கைகளின் அடிப்படையில் வியட்நாம் பிரச்னை பற்றி பிரதமர்கள் மகாநாட்டில் திரு. டட்லி சேனநாயகா தமது யோசனைகளைத் தெரிவிப்பாரென்றும் தெரிகிறது. இந்த இரு அறிக்கைகளையும் மகாநாட்டில் பிரதமர் சமர்ப்பிப்பாரென்றும் அறியப்படுகிறது.

ரொடீஷியப் பிரச்சினைபற்றியும் மகாநாட்டில் திரு. டட்லி சேனநாயகா இலங்கையின் கருத்தை வெளியிடுவாரெனவும் தெரிகிறது.

சென்றவருடம் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் பிரதமர் டட்லியின்சார்பில் நீதிமந்திரி திரு ஏ எப் விஜயமானே கலந்துகொண்டார்,

## திருமலை ஐக்கிய வங்கி 'செக்' பகிஷ்கரிப்பு

### வங்கிஊழியர் புதிய இயக்கம் ஆரம்பிக்கின்றனர்

கொழும்பு, திங்கள்

**திருக்கோணமலை மாவட்ட கூட்டுறவு வங்கியின் பெயரிலுள்ள காசோலைகள் அனைத்தையும் பகிஷ்கரிப்பதற்கான இயக்கம் ஒன்றை நாலாயிரத்து ஐநூறு அங்கத்தவர்களைக்கொண்ட இலங்கை வங்கி ஊழியர் சங்கம் ஆரம்பித்து வருகிறது.**

இந்தக் கூட்டுறவு வங்கியின்பெயருக்குஎழுதப்பட்ட காசோலைகளையோ, இந்த வங்கியின் பெயரிலுள்ள காசோலைகளையோ வங்கி ஊழியர் மாற்றிக் கொடுக்க மாட்டார்கள்.

வங்கி ஊழியரின் வேலை நிறுத்தப் பேச்சுவார்த்தைகளின்போது, வேலைநிறுத்த சமயத்தில் வங்கி வேலைக்கு அமர்த்திய தற்காலிக ஊழியரை வேலைநிறுத்தம் முடிந்ததும் வேலையிலிருந்து நீக்கிவிடுவதாக, வங்கி ஊழியர் யூனியனுக்கும் தொழில் அமைச்சருக்கும் வாக்குறுதி அளித்திருந்ததென்றும் இந்த வாக்குறுதியை திருமலை கூட்டுறவு வங்கி இப்பொழுது மீறி நடந்துகொள்கிறதென்றும் வங்கி ஊழியர் யூனியன் தெரிவித்து அதன் காரணமாகவே பகிஷ்கரிப்பு இயக்கத்தை ஆரம்பிக்கவிருக்கிறது.

## டாக்ஸி சாரதியின் சாதுரியம்: சிறுவனின் 'நாடகம்' பலிக்கவில்லை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் சிலரிடம் வேலை தேடி அலைந்து திரிந்த சுமார் 12 வயதுள்ள சிறுவன் ஒருவன், இருவரின் பெருமுயற்சியினால் உரிய இடத்தில் சேர்ப்பிக்கப்பட்ட சம்பவம் நேற்று இரவு நிகழ்ந்தது.

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் காணப்பட்ட சிறுவன் ஒருவன் பலரிடம் வேலை கேட்டு அலைந்து திரிந்தானென்றும் எதிர்பாராதவிதமாக இச்சிறுவனின் நடத்தையைக் கண்ணுற்ற ஒரு டாக்ஸி சாரதி, மற்றுமிருவரினது உதவியுடன் அச்சிறுவனை அழைத்துச்சென்று சுமார் ஆறு மணி நேரத்துக்குப்பின்னர் சிறுவனின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து அங்கு ஒப்படைத்ததாகவும் சொல்லப்படுகிறது.

தன் இஷ்டத்துக்கு வெளியில் புறப்பட்டுச்சென்று வேலை தேடும் நோக்கத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இச்சிறுவன் திருநெல்வேலியிலுள்ள ஒரு வித்தியசாலையைச் சேர்ந்தவன் என்பது பின்னர்தான்தெரியவந்தது.

### பிரதமர்மீண்டும் விமானியாவார்!

சைகோன், ஆக. 1

பிரதமர் ஏர் மார்ஷல் கி அரசியலிலிருந்துதாம் விலகி, மீண்டும் விமானப்படைக்கு திரும்பப் போவதாய் அறிவித்துள்ளார்,

## தமிழரசு வாலிப முன்னணி செயற்குழு 8-ல் கூடுகிறது

யாழ்ப்பாணம், செவ்.

தமிழரசு வாலிப முன்னணி மகாநாடு சம்பந்தமான ஒழுங்குகளைக் கவனிக்கும்பொருட்டு வாலிபமுன்னணியின் செயற்குழு இம்மாதம் எட்டாம் திகதி மாவிட்டபுரத்தில் கூடுகிறது.

மாவிட்டபுர வாலிப முன்னணி காரியாலயத்தில் நடைபெறும் இக் கூட்டத்தில் இம்மாதம் 21,22,23ம் திகதிகளில் மாவிட்டபுரத்தில் நடைபெறும் வாலிப முன்னணி மகாநாடு குறித்து பரிசீலனை செய்யப்படும். கடைசிநாளன்று நடைபெறும் பகிரங்கக்கூட்டத்தை எங்கு நடத்துவது என்பது குறித்து கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

தமிழரசு வாலிப முன்னணி மகாநாட்டில் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவும் அவரது பாரியாரும் கலந்துகொள்ள விருப்பது தெரிந்ததே.

## உள்நாட்டு விமானத்தபால் சேவை நேற்று ஆரம்பம்

கொழும்பு, திங்கள்

கொழும்பிலிருந்து அம்பாறை, திருக்கோணமலை, சீனன்குடா ஆகிய இடங்களுக்கான விமானத் தபால் சேவை இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அம்பாறை, திருமலை தபால் சேவைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் இணைந்த முறையில் இருக்கும். தபால்கள், தபால் அட்டைகள் மட்டுமே இச்சேவையில் அடங்கும். வழமையான தபால் கட்டணத்துடன் விசேஷ 15 சதம் விமானக் கட்டண முத்திரை தபால்கள், தபால் அட்டைகளில் ஒட்டப்படவேண்டும்.

இந்த ஏற்பாட்டின் மூலம் பொதுமக்கள் எக்ஸ்பிரஸ் தபால் விநியோக சேவை பெற முடியும்.

உள்நாட்டு விமான சேவையின் அலுவல்களைக் கவனிக்கும் பொருட்டு கொழும்பு பெரிய தபாற்கந்தோரில் இரு விசேஷ தபால்பெட்டிகள் நிறுவப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### கல்வி

வகுப்புகள்;

யோகபவனக் கலைக்கழகம் (Yoga Bhavan Academy):— ஜீ. சி. ஈ. கலை/விஞ்ஞான வகுப்புகள் சிறப்பாக நடைபெறுகின்றன. கீழ்வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. E. S. பியதாஸ அவர்களால் சிங்கள வகுப்புகள் நடத்தப்படுகின்றன. யோகபவனக் கலைக்கழகம், பொன்னப்பாலேன், வண்ணார் பண்ணை, 810

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, பிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாச பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

REGAL—JAFFNA
at 4-30 p.m. Only
GREGORY PECK
TONY CURTIS
in
Captain New Man M.D.
(Eastman Color)
மாலை 6-30க்கும்
இரவு 9-30க்கும்
திருவிளையாடல்

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர் - அஞ்சலிதேவி
நடித்த
சர்வாதிகாரி

மகாத்மா தியேட்டர்
(கரவெட்டி)
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
முதலியோர் நடித்த
"பூமாலை"


## வானொலி

### கொழும்பு
### செவ்வாய் 2 - 8 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**844 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**844 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-15 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

**844 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 இசை மெட்டு.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை, 7-15 பேச்சு, 7-30 குதூகலம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நாதஸ்வரம், 10-00 நேயர்விருப்பம்.

## நீக்ரோ கொலை


லூசியானு, ஒகஸ்ட் 1

உடைக்கப்பட்டகாரொன்றினுள் நீக்ரோ ஒருவர் சுடடுக்கொலை செய்யப்பட்டுக்கிடந்தார். அவர் உடல் கம்பளியினுல் போர்க்கப்பட்டிருந்தது. இதைப்பற்றிய தகவலை பொலீசாருக்கு அறிவிக்கச்சென்ற நீக்ரோத்தலைவர் ஒருவரைப்பொலீசார் கைதுசெய்துள்ளனர்.

(பி.டி.சி)


ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4-45, 7-00, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
ROCCO AND HIS BROTHERS

5-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)
ஸ்ரீ கிருஷ்ண (திருமலை)



ஜெயலலிதா - ஸ்ரீகாந்த்
மற்றும் பலர் நடித்த
ஸ்ரீதரின்
"வெண்ணிற ஆடை"

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நடித்த
எங்க வீட்டுப்பிள்ளை


# "எந்தக் கல்வித் திட்டத்துக்கும் ஆசிரியர் ஒத்துழைப்பு தேவை"

## வடமாகாண ஆசிரியர்சங்கத்தலைவர் கருத்து

யாழ்ப்பாணம், செவ்

"இப்போது நாட்டின் கல்வி ஒரே குழப்பநிலையில் உள்ளது. காரணம் ஆசிரியர்களை மதிக்கவேண்டியவர்கள் மதிப்பதில்லை. அவர்கள் அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகளாக நடத்தப்படுகின்றனர். கல்வியில் முன்னேற்றமடைய வேண்டுமேயானுல் ஆசிரியர்களைக் கனம்பண்ணி அவர்களுக்கு இருந்த அரசியல் உரிமைகளும் தகுதியான சம்பளமும் வழங்கப்படல் வேண்டும்."

இவ்வாறு சென்ற சனிக்கிழமை காலை புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரியில் நடைபெற்ற வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் 51-வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் சங்கத் தலைவர் திரு. கார்த்திகேசு தலைமையுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

றங்கள் அடங்கிய இது பாராளுமன்றத்தில் இரண்டாம் முறையாகவும் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. தேசியகல்விச் சபையொன்று அதிக பணச்செலவில் வெளியிடப்பட்டது. அதற்கு என்ன சம்பவித்தது என்று ஒருவருக்கும் தெரியாது.

உயர்தரக்கல்வி மசோதாவை எடுத்துக் கொண்டால் பாரதூரமான மாற்

இங்கிலாந்தில் உள்ள பேர்ண்ஹாம் கொமிஷன் போன்ற ஒரு நிரந்தரக் கல்விச்சேவையை ஸ்தாபிக்குமாறு இச்சங்கம் அரசாங்கத்திடம் நீண்டகாலமாக வற்புறுத்தி வந்தது. இச்சபையில் அரசாங்க கல்வி இலாகா உத்தியோகத்தர்களும் ஆசிரியப் பிரதிநிதிகளும் சம அந்தஸ்தோடு அங்கம் வகித்து கல்வியில் சீர் திருத்தம், நிர்வாகம் ஆகியவற்றை விவாதித்து யாவருக்கும் திருப்திகரமானமுடிவுக்கு வருவார்கள். இச்சபையொன்று இருந்திருந்தால் இப்போது கல்வி முறை இருக்கும் அவலநிலை ஒருபோதும் ஏற்பட்டிராது.

எனினும் இச்சங்கம் தாமாகவே மசோதாவிலுள்ள பிரதானமான குறைகளை எடுத்துக்காட்டி கனம் மந்திரியவர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒருமகஜர் சமர்ப்பித்திருக்கின்றது.

மாணவர்களின் தராதரத்திற்கேற்ப கல்வி போதிக்கப்படவேண்டுமென்ற உத்தேச சீர்திருத்தத்தை நாம் வரவேற்கின்றோம். ஆனல் இது எட்டாம் தரத்தில் அல்லாது கல்விப்பொதுத்தராதர நிலையில் (அதாவது 16வயதில்—14வயதில் அல்ல) செய்யப்படவேண்டும்.

இம்மசோதா மந்திரிக்கு எல்லையற்ற அதிகாரங்களை வழங்குவது ஆபத்தானது. அவர் சர்வகலாசாலைகளின் தனி அதிகாரியாயிருப்பார். ஏனைய நாடுகளில் இப்படி சர்வகலாசாலை நிருவாகத்தில் அரசாங்கம் தலையிடுவதில்லை. இந்தியாவிலும் ஏனைய பொதுநல நாடுகளிலும் உள்ளதுபோன்று சர்வகலாசாலைச் சபையொன்று இருக்கவேண்டுமென்று நாம் வற்புறுத்துகின்றோம்.

இம்மசோதாவில் காணப்படும் பாதகமாயுள்ள சரத்துகளை நீக்கி அரசாங்கம், ஏற்ற திருத்தங்கள் செய்யுமென நாம் நம்புகிறோம்.

ஆசிரியர்களின் இடமாற்றம் சம்பந்தமாக உத்தேசிக்கப்பட்ட "பிரதேச சேவையை" நாம் வரவேற்கிறோம், ஆனல் அரசியல் தலையீட் [illegible]

நிதித்துவம் வாய்ந்த ஒரு "நியமன இடமாற்றச் சபையை" நியமிக்கவேண்டும் என்று கோருகிறோம். மேலும் சமர்ப்பிக்கப்படும் மசோதாவில் உள்ள சபைகள் யாவற்றிலும் ஆசிரிய சங்கங்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும்.

இப்போது நடைபெறும் தமிழ்ச்சர்வகலாசாலை—இந்துச் சர்கலாசாலை விவாதத்தில் ஒருபக்கமும் சாயாது ஒரு முழுச் சர்வகலாசாலையின் கிளையை இரண்டாவது பெரும்பான்மையினரான தமிழர்களுக்கு அரசாங்கம் நிறுவவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்,

தேசியக் கல்விமுறை வெற்றியீட்டவேண்டுமேயானுல் அது ஆசிரியர்களையே பொறுத்துள்ளது. கல்வி மந்திரி அவர்களோ அவரது இலாகா அதிகாரிகளோ அதை உருவாக்க முடியாது, இதை அறிந்து ஆசிரியர்களின் உரிமைகளை வழங்குவதே புத்தியான செயலாகும்.

முடிவாக நாட்டின் தேவைக்குகந்த வருங்கால மக்களை உருவாக்கும் எந்தச் சீர்திருத்தங்களையும் செயலாற்ற ஆசிரியர்களாகிய நாம் எப்பொழுதும் எமது மனமுவ த[illegible] ஒத்துழைப்பைத் தருவதற்கு ஆயத்தமாயிருக்கிறோமெனக் கூற விரும்புகிறேன்".

## 'தேசிய ஐக்கியம் உருவாகிறது'

### வவனியா அரசாங்க அதிபர் கருத்து

வவனியா, திங்கள்

வவனியாவில்நடைபெற்ற களைபிடுங்கு விழாவில் வவனியா தமிழ் மகாவித்தியாசாலை மாணவர்களும் விவசாய மாணவ ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். விழாவிற்கு விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. எஸ். நடேசன் தலைமை தாங்கினுர்.

இவ்வைபவத்தில் பங்குபற்றிய வவனியா அரசாங்க அதிபர் கே. பி. எம். பி. திசநாயக்கா பேசையில் நாட்டின் ஜீவநாடியாக விளங்குவது உணவு உற்பத்தியென்றும் நாம் பிற நாடுகளை உணவிற்காக நம்பியிருப்பதுதவறென்றும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தற்பொழுது நாட்டில் தேசிய ஒற்றுமை உருவாகி வருகிறதென்பதை இன்று தேசிய கொடியை பிடித்து வந்த மாணவர்களே நிரூபித்துவிட்டார்கள். இதனை மனத்தில் கொண்டு நாம் உணவு உற்பத்தியைப்பெருக்க உழைக்கவேண்டும்.

இவ்விழாவில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் திருவாளர்கள் எஸ். நடராசா, பி. கனகநாயகம், கே திருநாவுக்கரசு, எஸ். பூரணலிங்கம் உட்பட இன்னும் பலர் கலந்துகொண்டனர்.

## தீர்த்தோற்சவம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சின்னக்கதிர்காமம் என அழைக்கப்படும் உரும்பராய் சிதம்பரசுப்பிரமணிய சுவாமி கோவிலில் கதிர்காம உற்சவத் திருநாள் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலையில் நடைபெறும். திருகுளிப்பு அதிகாலை ஐந்து மணிக்கு ஆரம்பமாகும்.

## புதிய நிர்வாகிகள்

அனலைதிவு, திங்கள்

அனலைதீவு துறைமுகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாரதி சனசமூக நிலையத்தின் ஆரம்பப் பொதுக்கூட்டம் இம்மாதம் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிளாகப்பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். போஷகர் திரு ஐ. செல்லையா, தலைவர் திரு நா. சுப்பிரமணியம், உபதலைவர் திரு க. அருச்சுனன், செயலாளர் திரு. செ சிவநேசன், துணைச் செயலாளர் திரு. பூ கமலநாதன், பொருளாளர் திரு க. குலமணி. செயற்குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

⁂

உடுப்பிட்டி, ஞாயிறு

அகில இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் நெல்லியடிக் கிளை புதுநிர்வாகிகள் விபரம் வருமாறு; தலைவர்: திரு. மிக்கேல் ராஜா உபதலைவர்: திரு கு. ராஜகோபால், செயலாளர்: திரு. செ சுவர்ணராசா, உபசெயலாளர்: திரு. தா. சிவசுப்பிரமணியம், பொருளாளர்: திரு. சி. செல்லத்துரை. மூவரடங்கிய நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## தாய்லாந்து மறுத்தது

பாங்கொங், ஒகஸ்ட் 1

ரொடீஷியாவின் 100 தொன் அரிசிக்கான கோரிக்கையை தாய்லாந்து மறுத்து விட்டது. ரொடீஷியாவுடன் பொருளாதாரத்தொடர்புகளைக்கடந்தஏப்ரலில் அறுத்துக்கொண்ட தாய்லாந்துக்கு ரொடீஷியாவிடமிருந்து வந்துள்ள முதல்கோரிக்கை இதுவேயாகும்.

## அரசினர் நெசவு நிலையம் சங்குவேலி

சங்குவேலி, திங்கள்

சங்குவேலிசிவஞானப்பிள்ளையார் கோவிலுக்கு அருகே அரசாங்க மான்யத்துடன் ஒரு நெசவுநிலையம் அமைக்கப்பட்டுவருகின்றது. இந்நிலையத்தை அமைக்க மட்டக்களப்பு மார்க்கண்டு முதலாளி குடும்பத்தார் சுமார் பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான காணியை அரசாங்கத்திற்கு நன்கொடையாக அளித்ததுடன் கட்டிடவேலைகளிலும் கூடிய பங்கு கொண்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய பிரதமர் ராஜிநாமா செய்யலாம்!

# இன்றைய சுப்ரீம் சோவியத் கூட்டத்தில் முடிவு தெரியும்

## வேறுசில மந்திரிகள் பதவி நீக்கப்படுவர் என தகவல்

மாஸ்கோ, ஆகஸ்ட் 1

சோவியத் உயர் அதிகாரபீடத்தில் பல மாறுதல்கள் இடம் பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது. பிரதமர் கோஸிஜினின் ராஜிநாமாவும் அதில் ஒன்ருய் இருக்கும் எனக் கூறப்படுகிறது.

நாளை நடைபெறவிருக்கும் சுப்ரீம் சோவியத் கூட்டத்தின்போது பிரதமர் ராஜிநாமாச் செய்வார் என்றும், வேறு சில மந்திரிகள் விலக்கப்படலாமென்றும் நிச்சயமாகத் தெரியவந்திருக்கிறது.

இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி சமீபத்தில் மாஸ்கோ சென்றிருந்தபோது, திரு. கோஸிஜின் அவரிடம் கூறிய தகவல் இந்த ராஜிநாமாச் செய்தியை ஊர்ஜிதம் செய்வதாய் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்தியாவுக்கு எப்போது வர உத்தேசித்திருக்கிறீர்கள் என ஸ்ரீமதி இந்திரா கேட்டதற்கு, தாம் பிரதமர் பதவியில் தொடர்ந்திருப்பதுபற்றி பார்லிமெண்ட்தான் முடிவுசெய்ய வேண்டும் என திரு. கோஸிஜின் பதிலளித்தாராம்.

திரு. கோஸிஜின் உடல் நிலை காரணமாக ராஜிநாமாச் செய்யக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

## நைஜீரியாவில்

லேகாஸ், ஆக. 1

நைஜீரியாவில் அரசாங்கத்துக்கும் கிளர்ச்சித் துருப்புகளுக்குமிடையே தொடர்ந்து பேச்சுக்கள் நடக்கின்றன. இப்போது அங்கு செய்தி தணிக்கை விதிக்கப்பட்டிருக்கிறது. ஜெனரல் இரான்ஸியின் நிலை என்னவென்பது இன்னும் தெரியவில்லை.

## கி. பெர்லினில் காமராஜர்

கிழக்கு பெர்லின், ஆக. 1

காங்கிரஸ் தலைவர் காமராஜர் நேற்று மாஸ்கோவிலிருந்து கிழக்கு பெர்லினுக்கு வந்து சேர்ந்தார். கிழக்கு ஜெர்மனியில் அவர் 3 நாள் சுற்றுப்பிரயாணம் செய்வார்.

## வட வியட்நாமியருக்கு ரஷ்ய நிபுணர்கள் பயிற்சி

### அமெரிக்க குண்டுவீச்சைப் பற்றி கட்டுப்பாட்டு கமிஷன் கவலை

ஹானோய், ஆக. 1

வடக்கு-தெற்கு வியட்நாம்களுக்கு மத்தியிலுள்ள ராணுவ விலக்கப் பகுதியில் அமெரிக்கா கடந்த இரு தினங்களாகக் குண்டுவீசி வருவது குறித்து சர்வதேச கட்டுப்பாட்டுக் கமிஷன் கவலை தெரிவித்திருக்கிறது.

இரு பகுதிகளையும் பிரிக்கும் 10 கிலோமீட்டர் சூன்யப் பிரதேசம் சம்பந்தமாக ஜெனிவா ஒப்பந்த அடிப்படையைக் கடைப்பிடிப்பதற்கு கமிஷன் சாத்தியமான சகல நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளும் என நேற்று வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது.

வடவியட்நாம் படை குவிப்புகளும், சப்ளைகளும் இப்பகுதியில் தாக்கப்பட்டதாக அமெரிக்கா கூறியது. ஆனால் இப்பகுதியில் வடவியட்நாம், படைகளைக் குவிக்கவில்லை என ஹானோய் மறுத்திருக்கிறது

ராணுவ விலக்கப்பகுதியில் அமெரிக்கா குண்டுவீசுவதை பிரிட்டன் ஆதரித்துள்ளது வெளிவிவகார அதிகாரி ஒருவர் இத்தகவலை லண்டனில் கூறினார். ஹானோய், ஹைபாங் மீது அமெரிக்க குண்டுவீச்சை பிரிட்டன் கண்டித்ததென்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க கனரக வெடிகுண்டு விமானங்கள் இப்பகுதியைத் தொடர்ந்து தாக்கி வருகின்றன.

இதற்கிடையில் வடவியட்நாமில் ரஷ்ய ராணுவ நிபுணர்கள் பயிற்சியளிப்பதாக அறிவிக்கப்பட்டது காட்டுப்பகுதியொன்றில் இரு நிபுணர்கள் வடவியட்நாமியருக்குப் பயிற்சியளிப்பதாயும், இதில் ஒருவர் மிகவும் திறமையும் அனுபவமும் மிக்க நிபுணர் என்றும் கூறப்பட்டது.

## ஜனசங்கமும் தேர்தலும்

புதுடில்லி, ஆக. 1

வருகிற தேர்தலில் ஜனசங்கம் எந்த அரசியல் கட்சியுடனும் தேர்தல் உடன்பாடு செய்து கொள்ளாது என்றும் ஆனால் கம்யூனிஸ்ட் முஸ்லீம் லீக் தவிர இதர எதிர்க்கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு செய்து கொள்ளும் என்றும் கட்சியின் பொதுக் காரியதரிசி கூறினார்.

250 பார்லிமெண்ட் ஸ்தானங்களுக்கும், 1500 சட்டசபை ஸ்தானங்களுக்கும் ஜனசங்கம் போட்டியிடும் என்றும் அவர் கூறினார்.

## ஜெனிவாவுக்கு பாக். கடிதம்

நியூயோர்க், ஆக. 1

பாரதம் விரைவில் அணு ஆயுதம் ஒன்றை வெடிக்க ஆயத்தம் செய்வதாக பாகிஸ்தான், பொதுக் காரியதரிசி யுதாண்டுக்கு கடிதம் எழுதியிருப்பதாய் ஐ. நா. வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன. பாகிஸ்தானின் விருப்பத்திற்கிணங்க இக்கடிதத்தை யுதாண்ட் ஜெனிவா ஆயுதப்பரிகரண மகாநாட்டிற்கு அனுப்பி வைத்திருப்பதாயும் அறிவிக்கப்பட்டது. ஐ. நா. விலுள்ள பாகிஸ்தான் நிரந்தரப் பிரதிநிதி இக்கடிதத்தை எழுதினார்.

## குடியேற்ற அலுவலகம் ஒழிந்தது!

லண்டன், ஆக. 1

300 ஆண்டு பழமை வாய்ந்த பிரிட்டிஷ் குடியேற்ற அலுவலகம் இன்று முதல் கலைக்கப்பட்டது. இனி அது சாம்ராஜ்ய உறவு இலாகாவின் ஒரு பகுதியாக இயங்கும். பிரிட்டிஷ் குடியேற்றப் பகுதிகள் பெரும்பாலும் விடுதலையானதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டது. ஆனால் இன்னும் 30 பிற தேசங்கள் பிரிட்டனின் பராமரிப்பில் இருக்கின்றன.

## கி. பாகிஸ்தான் எதிர்க் கட்சிகள்

டாக்கா, ஆக. 1

கிழக்கு பாகிஸ்தானிலுள்ள 6 எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்ட செயல் கமிட்டி ஒன்றை அமைக்க இருக்கின்றன.

## வியட்நாமில் நீக்ரோக்கள் போரிடக் கூடாது

டீற்ரொயிற், ஆக. 1

வியட்நாமில் அமெரிக்க நீக்ரோக்கள் சண்டையிடக் கூடாது என்று அமெரிக்க நீக்ரோத் தலைவர் ஸ்டோக்லி காமிகல் இங்கு கூறியுள்ளார்.

''பட்டாளத்தில் சேர்ந்து போராடுவதைத் தவிர எங்களுக்கு வேறு வழிகிடையாது என்ற நிலைக்கு எம்மை இந்நாடு தாழ்த்தியுள்ளது'' என்று அத்தலைவர் மேலும் கூறினார்.

## அரபு மகாநாடு பின்போடப்படும்?

அல்ஜீயர்ஸ், ஆக 1

அடுத்த மாதம் அல்ஜீயர்ஸில் நடைபெறவிருந்த அரபு நாடுகளின் உச்சி மகாநாட்டை ஒத்திவைக்கும் யோசனையை 6 அரபுநாடுகள் ஆதரித்துள்ளன. இந்த யோசனை முதலில் ஜனாதிபதி நாஸரினால் வெளியிடப்பட்டது.

## அமெரிக்க துருப்புகள் வாபஸ்

லண்டன், ஆக 1

பாதுகாப்பு இலாகா மறுத்தபோதிலும், ஐரோப்பாவிலுள்ள தமது துருப்புக்களில் 40,000 வீரர்களை அமெரிக்கா வாபஸ் பெற்றிருப்பதாயும், வியட்நாம் யுத்தத்தில் இவர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் தெரிகிறது.

## வான பஸ்கள்

மாஸ்கோ, ஆக. 1

ரஷ்யா, வான பஸ்கள், எனப்படும் விமானங்களை சேவையில் அமர்த்துகிறது. இதில் ஒவ்வொன்றிலும் 160 பிராணிகள், 500 கிலோமிட்டர் உயரத்தில் பறந்து செல்வார்கள். இப்புதாக விமானங்களில் தானே இயங்கும் இறங்கு முறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

## தமிழ் நாட்டுச் செய்திகள்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 3-வது தேர்தல் மகாநாடு சிவகங்கையில் ஆரம்பமாகியிருக்கிறது.

ஃ ஃ ஃ

தமிழ் நாட்டில் பக்தவத்சலம் மந்திரிசபை மீது எதிர்க்கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் 6 குற்றங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இதில் ''இந்திமொழி விஷயத்தில் தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்ததாக' ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது.

ஃ ஃ ஃ

சென்னை நகரில் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு கொலைகள் குறைந்திருப்பதாக பொலிஸ் கமிஷனர் அறிக்கை கூறுகிறது. 1965ம் ஆண்டு முதல் 6 மாதத்தில் 7 கொலைகள் நடந்ததாயும், ஆனால் 1966-ம் ஆண்டு முதல் 6 மாதங்களில் 3 கொலைகள் மட்டுமே நடந்திருக்கிறதென்றும் அதில் கூறப்பட்டுள்ளது!

ஃ ஃ ஃ

''கிழவன் இருந்தும் கெடுத்தான். செத்தும் கெடுத்தான்'' என்ற உவமானக் கதை ஒன்றை ராஜாஜி பற்றி மந்திரி கக்கன், காங்கிரஸ் பொதுக்கூட்டம் ஒன்றில், எடுத்துக்கூறினார். இந்தக் கதையில் 'கிழவனுக்குள்ள' ''நரிக்குணம்'' பற்றியும் அவர் வருணித்தார்.

ஃ ஃ ஃ

பாகிஸ்தான் உளவாளி எனக் கருதப்பட்ட ஸையத் அலி ஜமால் என்ற நபரை சூலூர் விமானநிலையத்தில் கோவை பொலிசார் கைது செய்தனர்.

ஃ ஃ ஃ

1967-ம் ஆண்டு தேர்தலில் தமிழ்நாட்டில் பிற்பட்டோர் கூட்டணி, மந்திரிசபை அமைக்கும் என உழைப்பாளர் பொதுநலக் கட்சித்தலைவர் திரு எஸ். எஸ். ராமசாமிபடையாச்சி கூறினார்.

ஃ ஃ ஃ

அரசாங்க சிப்பந்திகள் வேலையில் இருக்கும்போது திடீரென இறந்துபோனால் அவர்கள் குடும்பத்திற்கு சில ஆண்டுகள் பென்ஷன் கொடுக்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசாங்கம் கொண்டுவரவிருக்கிறது.

ஃ ஃ ஃ

கோவை ஹோட்டல்களில் சாப்பாட்டு விலையை உயர்த்துவதென ஒட்டல் அதிபர்கள் சங்கம் முடிவு செய்திருக்கிறது. சாப்பாடு 1 ரூபாய்க்கும், கோப்பி 20 காசுக்கும் விற்கப்படும்.

ஃ ஃ ஃ

பஞ்சாயத்து நிர்வாகம் பற்றி குறைகூறியவரை கன்னத்தில் அறைந்ததாக திருப்பேரூர் பஞ்சாயத் தலைவரும், பழைய சட்டசபை அங்கத்தினருமான முத்துச்சாமி நாயக்கர் மீது தொடரப்பட்ட வழக்கில் குற்றம் நிரூபிக்கப்படாததால் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

ஃ ஃ ஃ

வட ஆற்காட்டிலுள்ள குடியாத்தம் நகர ஆஸ்பத்திரியில் ஒரேநாளில் 148 பேருக்கு கருத்தடை 'ஆபரேஷன்' செய்யப்பட்டது.

ஃ ஃ ஃ

தமிழ் நாட்டில் அடுத்த பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் அக்டோபர் 1-ம் திகதிக்கு முன் வெளியிடப்படும்.

ஃ ஃ ஃ

தமிழ் நாட்டில் சாதிக்கட்சிகள் எழுச்சிபெற்றுவிட்டன என்று (வன்னியர்கள்) உழைப்பாளி கட்சித் தலைவர் ராமசாமிபடையாச்சி கூறினார்.

ஃ ஃ ஃ

சென்னை தொழில் நுட்ப கல்லூரியில் படிக்கும் 8 மாணவர்கள் 22000 அடி உயரமான காங்வில்டா என்ற இமயமலைச்சிகரத்தில் ஏறி வெற்றிகண்டிருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

வருகிற செப்டம்பர் 1-ம் திகதி முதல் சென்னையில் மலிவு விற்பனைக்கான அரசாங்கக் கடையை முதல் மந்திரி ஆரம்பித்துவைப்பார்.

## இளவரசிக்கு பெண் குழந்தை

லண்டன், ஆக. 1

29 வயதான அலெக்ஸாண்டிர இளவரசி நேற்று பெண் மகவு ஒன்றைப் பிரசவித்தார். ஏற்கனவே அவருக்கு 2 வயது ஆண்குழந்தை ஒன்று இருக்கிறது.

புடாபெஸ்ட், ஆக. 1

ஹங்கேரியில் ரஷ்யத் துருப்புக்கள் தொடர்ந்திருப்பது நியாயமும், அவசியமும் என அந்நாட்டுத் தலைவர் காடர் கூறியிருக்கிறார்.

தென் மேற்கு ஆபிரிக்கா

## உலக நீதிமன்றத் தீர்ப்புக்கு பாகிஸ்தானும் பொறுப்பு?

### விசாரணையில் ஸபருல்லா கலக்கவில்லை

புதுடில்லி, ஆகஸ்ட்1

தென்மேற்கு ஆபிரிக்கா பற்றி உலகநீதிமன்றம் வழங்கிய தீர்வுக்கு பாகிஸ்தானும் ஒருவிதத்தில் பொறுப்பு எனக் கூறப்படுகிறது உலக நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவராய் இருக்கும் பாகிஸ்தானைச்சேர்ந்த திரு. ஸபருல்லாகான், இந்த வழக்கு சம்பந்தமான விசாரணையிலோ அல்லது தீர்ப்பிலோ கலந்து கொள்ளவில்லையென இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

தாம்உலக நீதிமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஆபிரிக்க நலன்களை பாதுகாப்பதாக அவர் உறுதி கூறியிருந்தார் என்றும், ஆனால் சட்டகாரணத்தைக் கூறி வேண்டுமென்றே அவர் தென்மேற்கு ஆபிரிக்கா பற்றிய விசாரணையிலிருந்து விலகிக்கொண்டாரென்றும் கூறப்படுகிறது. இவ்விஷயம் பற்றி பாகிஸ்தான் அரசாங்கம் இதுவரை எதுவுமே கூறவில்லையென்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆனால் மெக்ஸிகோ நீதிபதி, நீதிமன்றத்தலைவரின் முடிவை ஆட்சேபித்தார்என்பதும், போலந்து இத்தீர்ப்பிலிருந்து விலகிக்கொண்டது என்பதும் எடுத்துக்காட்டப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

அன்புஎன்பதற்கு மதம், சாதி, இனம், என்கிற வேறுபாடுகள் எதுவும் இடையாது.

—மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆடி மீ 17 உ (2-8-66)

# வெளிநடப்பு இயக்கம்!

ஜனப் பிரதிநிதிகள் சபையில் நிதி அமைச்சர் தமது வரவு செலவுத் திட்ட உரையை ஆங்கிலத்தில் நிகழ்த்த ஆரம்பித்ததும் எதிர்க்கட்சி எம். பி.க்கள் சிலர் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர். சிங்கள எம். பி.க்கள், சிங்களத்தில் தவிர வேறு எந்தமொழியில்சபையில்பேசினாலும், இனி அதைப் பகிஷ்கரிக்கப்போவதாக தெரிவித்துள்ளதுடன் அதற்கென ஓர்இயக்கத்தையும் ஆரம்பித்துள்ளனர். இந்த இயக்கத்தில் ஆளும்கட்சியைச் சேர்ந்த இரண்டொரு எம். பிக்களும் சேர்ந்துள்ளனராம். இந்த 'பிறமொழிப் பேச்சு' பகிஷ்கரிப்பு இயக்கம் ஜனப்பிரதிநிதிகள் சபைக்குப் புதிதல்ல. இதற்கு முன்னரும் நடைபெற்றிருக்கிறது. இந்த இயக்கத்தை எதிர்க்கட்சி அங்கத்தவர் சிலர் ஆரம்பித்துள்ளபோதிலும் எதிர்க்கட்சியிலுள்ள முக்கிய தலைவர்கள் இந்த இயக்கத்தை ஆதரிப்பார்களென்று எதிர்பார்க்க முடியாது. முன்னாள் நிதி மந்திரிகளான டாக்டர் என். எம். பெரேரா, திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோர் ஆங்கிலத்தைப் பகிஷ்கரித்து சிங்களத்தில் தான் பேசுவார்களென 'பகிஷ்கரிப்பு' இயக்கத்தை ஆரம்பித்தவர்களும் எதிர்பார்க்கமாட்டார்கள்.

ஜனப்பிரதிநிதிகள் சபையில்சிங்களத்திலோ, தமிழிலோ, ஆங்கிலத்திலோ பேசினால் உடனுக்குடன் மூன்றுமொழிகளிலும் மொழிபெயர்ப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மூன்று மொழிகளிலும் அங்கத்தவர்கள் பேசுவதற்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது. பேசுபவர், தாம் என்ன பேசுகிறோமென்பதை விளங்கிப் பேசவேண்டும். மற்றவர்களும் அவர் பேசுவதை விளங்கிக் கொள்ளவேண்டும். இல்லையெனில் சபையில் பேசுவதால் என்ன பயன்? யாருக்குப் பயன்?

பார்லிமெண்ட் சபை நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்டு வெளியிடப்படும் ''ஹன்சார்ட்'' அறிக்கைப் பிரதிகளைப் பார்த்தால் பெரும்பாலும் சிங்களத்தில்தான் அது இருக்கிறது. சிங்களம் தெரியாத மக்கள் பார்லிமெண்டில் எவர் என்ன பேசியிருக்கிறார்; என்ன நடந்திருக்கிறதென்பதைப் புரிந்துகொள்ளமுடியாது. சபை அங்கத்தவர்கள் அனைவரும் சபையிலேயே இருந்தால், உடன் மொழிபெயர்ப்பு ஏற்பாட்டினால் சபை நடவடிக்கைகளை அறிந்துகொள்ளமுடியும். ஆனால் சபை நடவடிக்கைகளை அறிந்துகொள்ள விரும்பும், சிங்களம் தெரியாத மக்களுக்கு ''ஹன்சார்ட்'' உதவிபுரிவதாக இல்லை. பார்லிமெண்டில் நிகழ்த்தப்படும் ஆங்கிலப்பேச்சுக்களை சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் பெயர்க்கவும் சிங்களப் பேச்சை தமிழிலும் தமிழ்ப் பேச்சைச் சிங்களத்திலும் பெயர்க்கவும் ஒழுங்கு செய்வது பொது மக்கள், தங்கள் பிரதிநிதிகள் என்ன சொல்லுகிறார்கள்; என்ன செய்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வாய்ப்பேற்படுத்தும். தமிழ் மொழிச் சட்ட விசேஷ விதிகளை நிறைவேற்றிய பார்லிமெண்ட் சபைகளே தமிழ் மொழியை உபயோகிப்பதிலும் வழிகாட்டுவது பொருத்தமானது.


நிதி அமைச்சர் ஆங்கிலத்தில் தமது உரையை நிகழ்த்தியதற்காக, ஆங்கிலம் தெரிந்த எம். பிக்களும் கூட சபையிலிருந்து வெளிநடப்புச் செய்திருக்கின்றனர். ஆங்கிலமோ சிங்களமோ தெரியாத தமிழ் பேசும் மக்கள், சிங்களம் மட்டுமே தெரிந்த உத்தியோகத்தர்கள் கடமையாற்றும் அரசாங்க இலாகாக்களில் படும் தொல்லை பற்றியும் தமிழ்ப் பகுதிகளிலிருந்து, தமிழ் மட்டும் தெரிந்த மக்கள் தமிழில் எழுதும் கடிதங்களுக்கு அரசாங்க இலாகாக்களிலிருந்து சிங்களத்தில் மாத்திரம் பதில் வருவதால் அவர்கள் படும் கஷ்டங்கள் பற்றியும் வெளிநடப்புச் செய்த எம். பிக்கள் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். மொழி ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கானது. கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய் வாழ்வதால் என்ன பயன்?

## நெடுந்தீவுக்கு பொலிஸ் நிலையம்

நெடுந்தீவு, திங.

''நெடுந்தீவுக்கு ஒரு பொலிஸ் நிலையம் வேண்டுமென நான் சிபார்சு செய்துள்ளேன். தொடர்ந்து இதனைப் பின்போடுவது இச்சிறிய தீவின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் இன்னும் சில மாதங்களில் இங்கு ஒரு பொலிஸ் நிலையம் வரும் என்பது எனது நம்பிக்கையாகும்.'' என வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா குறிகாட்டுவான் துறைமுகத் திறப்பு விழாவை தொடக்கி வைத்த பின் நெடுந்தீவு மக்களால் அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசும் போது கூறினார். கூட்டத்திற்கு திரு. வி. நவரத்தினம், (தீவுப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்) தலைமை வகித்தார்.

அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில்: இங்குள்ள பிரயாண வசதியைச் சீர்ப்படுத்தும் நோக்கமாக இன்னும் மூன்று மாதங்களுக்குள் மூன்று மோட்டார் வள்ளங்கள் பிரயாணச் சேவையில் ஈடுபடச் செய்வேன் என உறுதி கூறினார். இக் கூட்டத்தில் திருவாளர்கள் ம. கணபதிப்பிள்ளை, எஸ். நாகேந்திரம், ஆர். சின்னத்தம்பி எஸ். [illegible] மணியம் ஆகியோரும் பேசினர்.



# ஆசிரியருக்கு கடிதங்கள்

## கொழும்புக் கோட்டையில் ஓர் இந்து வாலிபர் சங்கமண்டபம்

இலங்கையில் பின்பற்றப்பட்டுவரும் மதங்களின் வாலிபர் சங்கங்கள் அத்தனைக்கும் கொழும்புக் கோட்டையிலே, மதத்தின் பெயரால் பௌத்த வாலிபர் மண்டபம், கிறீஸ்தவ வாலிபர் மண்டபம், இஸ்லாமிய வாலிபர் மண்டபம் என மண்டபங்கள் அமைந்திருக்கும் போது, இலங்கையில் உள்ள மதத்தவர்களுள் இரண்டாவது பெரும்பான்மை மதத்தவராகவுள்ள இந்து சமயத்தவர்களுக்கு மாத்திரம், கேந்திரஸ்தானமாகிய அம் மாநகரப் பகுதியில் தமது வழிபாட்டைச் செலுத்த, அல்லது ஆசாரசீலத்தை அனுட்டிக்க, ஓர் இடத்தை இதுகாலவரை இந்து மக்களாகிய நாம், அமைக்காதுவளாவிருப்பதையிட்டுவெட்கப்பட வேண்டியுள்ளது.

கொழும்பு மாநகரிலே— அதுவும் இக்கேந்திரஸ்தானமாக அமைந்திருக்கும் கோட்டையிலே— ஏகப்பட்ட காரியாலயங்களில், எண்ணற்ற இந்துக்கள் கடமையாற்றுகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பிற சமயத்தைச் சேர்ந்த அத்தனை மக்களும் தமது சமயத்தையிட்டு உரிமை கோரிப் பெருமை பேசுவதற்கேற்ப, பெரிய கட்டடங்களை அமைதிருக்கிறார்கள். இங்கு அவர்கள் தமது சமயத்தை வளர்ப்பதற்கேற்ற வழி வகைகள் செய்கிறார்கள். காலத்திற்குக் காலம் பிரசங்கங்களும் கூட்டுப் பிரார்த்தனைகளும் நடத்துகிறார்கள். ஆனால் இந்துக்களாகிய நாமோ ஒரு சரஸ்வதி பூசையையோ கூட்டுப் பிரார்த்தனையோ நடாத்துவதற்கு தகுந்த மண்டபத்தை இங்கு அமைக்காது இருப்பது வெட்கத்துக்குரிய ஒரு பெரிய விஷயமாகும்.

அதுமட்டுமல்லாது மற்றும் சமய ஸ்தாபனங்கள் தற்போது அமைத்து வைத்திருக்கும் ஸ்தாபனங்கள் மூலம் காலத்திற்குக் காலம் பிரசங்கங்களும் பூசைகளும் நடாத்தி வருவதால் அவர்கள்மத்தியில் ஒருசமய எழுச்சியையும் ஒரு விழிப்புணர்ச்சியையும் தூண்டும் ஸ்தாபனங்களாகஇவைஇயங்கிவருகின்றன. அத்துடன் இவை தமது சமயத்தவர்களுக்கு உரிமையுடன் தங்கும் வசதிகளும் போசன வசதிகளும் செய்து கொடுக்கும் அளவிற்கு அமைந்துள்ளன.

ஆனால் எமது இந்துக்கள் தமது ஆசார சீலங்களை இந்து ஆசாரப்படி ஒழுங்காக நடப்பதற்கு அதைப்பற்றி மற்றவர்கள் அறிவதற்கேற்ப அறிவுரைகள் வழங்குவதற்கு இங்கு ஒரு ஸ்தாபனம் அமையாதிருப்பது எமது சமயமறுமலர்ச்சிக்கே ஒரு தடையெனக் கூறினும் தகும். இவற்றால் எமது இந்துக்கள் உரிமையுடன் பெருமையாகத் தமது சமய வணக்கத்தையோ அல்லது ஆசாரத்தையோ அனுட்டிக்க முடியாது அல்லற்பட்டு வெட்கத்துடன் துக்கப்படுகிறார்கள் என்பதை நாம் பட்டவர்த்தனமாகக் கூறலாம்.

மேலும் பழுத்த பண்புள்ள இந்துக்கள் பலர் சரியான முறையில் தமது அனுட்டானங்களை செய்வதற்கு தகுந்த ஒரு ஸ்தாபனம் இல்லாததால் தமது [illegible] அனுட்டானங்களில் நின்றும் நிலைதவறி வாழவேண்டியவர்களாக இருக்கிறார்கள். மற்றும் சமயத்தவர்களைப் போல் இந்துக்களாகிய எமக்கும் கேந்திர ஸ்தானமாகிய கோட்டையிலே ஒரு ஸ்தாபனம் இருக்குமாயின் இலங்கையின் எத்திக்கில்இருந்து வரும்ஒவ்வொரு இந்துவும் ஆசாரசீலத்தை அனுட்டித்து ஏகக்கூடியதாக இருக்கும் என்பதை சைவப்பெருமக்களாகிய நாம் நன்குஉணரவேண்டும்.

இதற்கு இலங்கை வாழ் இந்துக்களுள் கசடறக்கற்ற கல்விமான்களும் செல்வமும் செல்வாக்குமுடைய பல வர்த்தகர்களும் நம் மத்தியில் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதற்கு ஆகவேண்டிய இடமும் பௌத்த வாலிபர் சங்கக் கட்டடத்திற்கும் தொலைபேசி இணைப்பு தலைமை அலுவலகத்திற்கும் (கட்டப்படும் கட்டடம்) இடையில் அமைந்திருக்கும் அரசாங்க தபால் பொதியறைக் காரியாலயம் அமைந்திருக்கும் இடத்தை இந்துக்களாகிய எமக்கு அளிக்கும்படி ஆகவேண்டியவர்களை வேண்டுவதற்கு இந்துப் பெரியார்கள் அரசியல் விற்பன்னர்கள் அத்தனை பேர்களும் முன்னின்று உழைக்க முன்வரவேண்டும்.

கே. எஸ். இராஜேஸ்வரன்
துணைச்செயலாளர்,
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## குறிகாட்டுவான் படகு சேவை

பலகாலமாகக் கஷ்டப்பட்டுவந்த நெடுந்தீவுப் பிரயாணிகள் குறிகாட்டுவான் துறைமுகம் திறந்துவைத்ததும் சேவை சீர்திருந்திவிடும் என எண்ணியுள்ளார்கள். மோட்டார் வள்ளங்கள் புறப்படும் நேரமே மிகமுக்கியமாகும். நெடுந்தீவு மக்களுக்கு தலையாய பிரச்சினை பிரயாணமே. நெடுந்தீவில் இருந்து ஒருவர் யாழ்ப்பாணம் சென்று தமது கருமங்களை அரசாங்க அலுவலகங்கள், வியாபார தொழில்கள், நீதிமன்றங்கள் ஆகியவற்றுக்குச்சென்று மீண்டும் அதே நாள் வீடுதிரும்புவதும், அடுத்ததுஒருகடிதம்கிடைத்தால் அன்றே பதில்போடவும், பிரயாணம்செய்யவும் ஏதுவான முறையில் இப்படகுச்சேவை அமையவேண்டும் இவை இரண்டும் அமைய நெடுந்தீவில் இருந்து காலை 7 மணிக்கும் மீண்டும் அப்படகு குறிகாட்டுவானில் இருந்து 3-45க்கு நெடுந்தீவுக்குச்செல்லவும், குறிகாட்டுவானில் இருந்து காலை 9 மணிக்கு தபால் உடன் புறப்பட்டு மீண்டும் 2-30க்கு நெடுந்தீவிலிருந்து புறப்படுமேயானால் ஓரளவு நெடுந்தீவு மக்களின் கஷ்டம் நீங்கும் என்பது உறுதியாகும். இவ்வட்டவணைப்படி ஒரு மோட்டார் வள்ளமே நெடுந்தீவில் இருந்து புறப்படுமேயானால் சமாளிக்க முடியும் அம்புலன்ஸ் மோட்டார் படகும் பழுதடைந்திருப்பதால் நெடுந்தீவில் தற்போது சேவையில் ஈடுபடும் சில்வர்ஸ்பிரே கட்டுவது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இதனை அரசாங்கம் செய்து தருமா?

ஒரு பிரயாணி
நெடுந்தீவு.

## நாட்டிலும் நகரிலும்

கடந்த ஒருவார காலமாக யாழ்ப்பாணப் பட்டினம் திமிலோகப்படுகிறது. இதற்குக் காரணம் 'திருவிளையாடல்' என்ற சினிமாப் படம் இங்கே விஜயம் செய்திருப்பதுதான். இரண்டு தியேட்டர்களில் இந்தப் படத்தைக் காட்டுகிறார்கள். அப்படியிருந்தும் ஜனக்கூட்டம் தாங்கமுடியவில்லையாம். ஒருவர்மூன்று நாளாகப் போய்ப்போய்டிக்கட் இல்லாமல் திரும்பிவிட்டாராம்.

தமிழ்நாட்டில் சினிமா ராஜ்யம் ஆரம்பித்த பொழுது, அதாவது சுமார் 35 வருடங்களுக்கு முன்பு, படத் தயாரிப்பாளருக்கு நல்ல கதைகள் கிடைக்கவில்லை. வற்றாச் சுரங்கங்களாகியநமது ராமாயணம், மஹாபாரதம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றையே கிண்டிக் கிளறி புராணக் கதைகளாக படம்பிடித்துத் தள்ளினார்கள். சம்பூர்ண ராமாயணம், சங்கீத கோவலன், வள்ளிதிருமணம், நந்தனார், பஞ்சபாண்டவர் வனவாசம், அரிச்சந்திரா— இவை அந்தக்காலத்துப் படங்களில் சில. புராணக்கதைகளும், புராணகாலத்துப் பாத்திரங்களும் வெள்ளித்திரையில் சின்னாபின்னமாக சித்திரவதை செய்யப்பட்டன, நமது தெய்வங்கள் கூடப் படப்பிடிப்பாளர்களிடம் சிக்கி படுகாயமுற்றன.

பிள்ளையார் வேஷம்போடுகிறவர் பொய்த் தும்பிக்கையை வைத்துக்கொண்டு கஷ்டப்படுவதும், நான்கு தலைகளை மாட்டிக்கொண்டு பிரம்மா திண்டாடுவதும், கழுத்தில் நாகபாம்புகளைச் சுற்றிக்கொண்டு பரமசிவன் துயரப்படுவதும் பாட்டிகளுக்குப் பரமானந்தத்தை ஊட்டியதேயன்றி, உண்மையில் சமயப்பற்றுள்ள பகுத்தறிவாளர்களுக்கு அருவருப்பையும் வருத்தத்தையும் கொடுத்தது. புனிதமாக வைத்துப் போற்றப்பட வேண்டிய தெய்வங்களை இப்படிச் சந்திக்கிழுத்து வம்பு செய்கிறார்களே யென்று அவர்கள் அழலானார்கள். மற்றச் சமயத்தவர் பார்த்துக் கேலி செய்யும் வண்ணம் தேவதைகளை சித்திரத்திரைகள் வைத்து சத்திர சிகிச்சை செய்கிறார்களேயென்று கொதித்தார்கள்.

'புராணக் கதை போதுமப்பா' ஏதாவது சமூகக் கதைகளைப் படம் பிடியுங்கள்' என்ற கூக்குரல் பத்திரிகைகளிலும் பொதுமேடைகளிலும் எழுந்தது. படப்பிடிப்பாளர்களும் இதற்குச் செவி சாய்த்து சமூகக்கதைகளைப் படம்பிடிக்கத்தொடங்கினர். சில வருடங்களாகப் புராணக்கதையின் நாமமே கிடையாது. இப்பொழுது சினிமா கதாசிரியர்களுக்கு கற்பனை ஊற்று வற்றிவிட்டது போலும். பழையபடி புராணத்தில் கைவைக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

புதுப்பெயர்களுக்குள் மறைந்துகொண்டு பழைய கதைகள் திரும்பத் திரும்ப வருகின்றன. முருகனும் வள்ளியும், ராமரும் சீதையும், கண்ணகியும், சந்திரமதியும் மூன்று நான்கு தடவை சினிமாத்திரைக்கு விஜயம் செய்துவிட்டார்கள்

பிறசமயத்தவர்கள் தாங்கள் வணங்கும் தெய்வங்கள் சினிமாவில் சித்தரிக்கப்படுவதை வெகு மும்முரமாக எதிர்த்து வருகிறார்கள் கடவுளர்களைக் கேவலம் மனிதர்கள் உருவகப் படுத்துவது சமயதூஷணம்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடுப்பிலிருந்த கத்தியை எடுத்து குத்தினர்

## உரும்பராய் கரந்தன் கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

"எதிரி இடுப்பில் இருந்த கத்தியை எடுத்து, இறந்தவரின் இருகைகளையும் பிடித்துக் குத்தினர். உடனே அவர் நிலத்தில் விழுந்து விட்டார்."

உரும்பராய் கரந்தன் கொலை வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில், நீதியரசர் பி ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, விவேகானந்தராசா ராஜேஸ்வரி சாட்யமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் கரந்தனில் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ம் திகதி இராமன் ஐயாத்துரையை, கதிரவேலு கந்தசாமி என்பவர் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் அட்வகேட் ரி. கே. கேட்டிஸ், அட்வகேட் எஸ். நாகராஜாவின் உதவியுடனும், புறக்டர் எம். அன்ரனியின் அனுசரணையுடனும் ஆஜரானர். எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் வி. ரி. சிவலிங்கம் நியமிக்கப்பட்டிருந்தார்.

விவேகானந்தராசா ராஜேஸ்வரி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவம் நடந்த தினம் ஞாபகமிருக்கிறது. அச்சமய என் கணவர் ஒரு கடை நடாத்தி வந்தார். நான் அக் கடையில் வியாபாரம் செய்வது வழக்கம். சம்பவம் நடந்ததினம் பிற்பகல் 4 மணிக்கு நான் கடைமுன் பிள்ளைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தேன். கடைக்குள் பொன்னம்பலம் இருந்தார். தற்பொழுது பொன்னம்பலத்தின் இருப்பிடம் எனக்குத் தெரியாது.

காலஞ்சென்ற ஐயாத்துரை கடைக்குச் சயிக்கிளில் வந்தார். நான் அவருக்கு 50 ரூபா மிகுதிக் காசு கொடுக்கவேண்டியிருந்தது. அவர் அப்பணத்தைக்கேட்டார். அவரைக் கொஞ்சநேரம் நிற்கும்படி கூறினேன். காலஞ்சென்றவர் கடைவாசலில் காத்துக் கொண்டிருந்தார்.

எதிரியின் மனைவி சரசுவதி வந்து அரைரூத்தல் விஸ்கோத்து வாங்கினர். அந்நேரம் எதிரி அங்கு வந்தார் தனது மனைவியைத் தாக்கி காலால் உதைத்தார். தலையிலும் அடித்தார். மனைவிரோட்டுப்பக்கமாக ஓடினர். எதிரி வீட்டுப் பக்கமாகச் சென்றார். வீடு கடையிலிருந்து 50 யார் தூரத்திலிருந்தது. காலஞ்சென்றவர் அப்பொழுது கடையில் நின்றார். நான் பணத்தைஎடுக்கும்பொழுது எதிரி வருவதைக்கண்டேன். எதிரி இடுப்பில் இருந்த கத்தியை எடுத்து, இறந்தவரின் இரு கைகளையும் பிடித்துக் குத்தினர் உடனே அவர் கீழே விழுந்துவிட்டார். கத்திப் பிடியை எதிரி எறிந்ததைக் கண்டேன். நான் கடைக்கு வெளியில் வந்து 'ஐயோ கந்தசாமி குத்திப்போட்டு ஓடிவிட்டார்' என்று கத்தினேன். அதன் பின் பலர் கூடினர்கள். என் கணவர் மாலை 5 மணிக்கு வந்தார் நான் நடந்தவற்றைக் கூறினேன்.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்

# "இறந்தவர் உடம்பில் 25 காயங்கள்"

## பெரிய விளான் கொலை வழக்கில் டாக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்

பெரியவிளான் கொலை வழக்கு நேற்றுக்காலை மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. டி. எஸ். நிதசிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டவைத்திய அதிகாரி டாக்டர் ஏ. சுப்பிரமணியம் சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் பெரியவிளானில், இவ்வருடம் ஜூலை மாதம் 1-ந் திகதி சுப்பிரமணியம் சிவகுருநாதன் என்பவரை, சின்னத்துரை தர்மலிங்கம், சிதம்பரி மாணிக்கம், சங்கரி கந்தசாமி ஆகியோர் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

1-ம் எதிரிசார்பில் அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம். அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதனின் உதவியுடனும் புறக்டர் ரி. நவரத்தினத்தின் அனுசரணையுடனும் ஆஜரானர்.

2-ம், 3-ம் எதிரிகள் சார்பில் அட்வகேட் ரி. கணேசலிங்கம், புறக்டர் ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர்.

டாக்டர் சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில், இறந்தவர் உடம்பில் 16 வெளிக் காயங்களும், 9 உள் காயங்களும் இருந்ததாகக் கூறினர்.

விசாரணையின் பின் வழக்கை இம்மாதம் 16-ந் திகதிக்கு மாஜிஸ்டிரேட் ஒத்திவைத்தார்.

## ஆசிரியரும் மகஜர் சமர்ப்பிப்பர்

யாழ்ப்பாணம், திங்

தேசிய தொழிற்சங்க சம்மேளனத்தில் சுமார் 350 அங்கத்தவர்களைக் கொண்ட ஆசிரியர் சங்கம் ஒன்றும் சேர்ந்துள்ளது, இத்துடன் இச்சம்மேளனத்தில் 29 சங்கங்கள் அங்கம்வகிக்கின்றன.

அரசினர் தராதரப்பத்திர ஆசிரியர் சங்கமே, சம்மேளனத்தில்சேர்ந்து கொண்ட புதிய சங்கமாகும் நேற்றுக்காலை யாழ்ப்பாணத்தில் சம்மேளன இணைச்செயலாளர் திரு. என் சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், பிரதமர் யாழ்ப்பாணத்திற்கு வரும் சமயம். ஆசிரியர் சங்கக்குழு ஒன்று அவரைச் சந்தித்து, மகஜர் ஒன்றைச் சமர்ப்பிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

## 46 ஆசிரியர் வேலைநீக்கம்

கொழும்பு, ஞாயிறு

சென்ற பொதுத்தேர்தலில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு இதுவரை 46 ஆசிரியர்கள் வேலைநீக்கம்செய்யப்பட்டுள்ளனர், இருநூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் தற்காலிக வேலைநீக்கம்செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் 80 பேர் மீதான [illegible]

## சோஷலிசப் புரட்சிக்கு இனஒற்றுமை அவசியம்

### எல். எஸ். எஸ். பி. தீர்மானம்

கொழும்பு, ஓகஸ்ட் 1

சோஷலிசப் புரட்சிக்கு இன ஒற்றுமை அவசியம் என்று அண்மையில் நடந்தேறிய லங்கா சமசமாசக் கட்சியின் வருடாந்த மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தீர்மானம் மேலும் கூறுவதாவது: எல்லாஇனத்தவரையும் கொண்ட உழைக்கும் சமூகத்தினரின் ஒற்றுமையின்மூலமே இலங்கையின் சோஷலிசப் புரட்சி பலப்படுத்தப்படலாம். இதைக் கருத்திற்கொண்டு, வகுப்புவாதத்தை ஏற்க மறுப்பது சோஷலிச இயக்கத்திற்கு அவசியமாகிறது.

1956-ம் ஆண்டு தொடக்கம் 1965-ம் ஆண்டுவரை இருந்துவந்த சூழ்நிலைகளிலிருந்து பெரிதும் மாறுபட்ட சூழ்நிலைகளிலேயே எதிர்காலப் போராட்டம் நடாத்தப்படவேண்டும்".

மாநாட்டுக்குக் கட்சியின் பொதுக்காரியதரிசியான திரு. லெஸ்லி குணவர்த்தன சமர்ப்பித்த அறிக்கையில் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டிருந்தார்.

கட்சியிலிருந்துபிரிந்த புரட்சிவாதிகளை நான்காவது சர்வதேசியம்ஏற்றுக் கொண்டதால், அதனுடனுள்ள இயக்கத் தொடர்புகளைக் கட்சி இழந்துவிட்டது.

கடந்த ஆறு மாதங்களில் கட்சியின் அங்கத்துவம் அதிகரித்துள்ளது.

பாராளுமன்றத்துக்கு உள்ளும் வெளியும் சமசமாஜக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையேயுள்ள ஒற்றுமை பெரிதும் வலுவடைந்துள்ளது.

வியட்னமில் புரட்சிப் படையினரான வியட்காங்கியருக்கு ஏதாவது வகையில் உதவி அளிக்கவேண்டுமென்றும் கட்சிமகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

## கொடுமைக்குத் தண்டனை

பலப்பிட்டியா, ஞாயிறு

களுத்துறையைச் சேர்ந்த உமனகே சில்வா என்பவர் 21 மாடுகளை ஒரு லொறியில் ஏற்றிச்சென்றதற்காகப் பலப்பிட்டியா மாஜிஸ்திரேட் திரு. எம். பி. ஜிதிஸநாயக்கா அவருக்கு ரூபா 100 அபராதம் விதித்தார். பிற்பகல் 1 மணிவரையான சிறைத்தண்டனையும் உமனகேவுக்கு விதிக்கப்பட்டது. மிருகங்களை கொடுமையாக நடத்தும் வழக்கம் ஒழிக்கப்பட வேண்டுமென மாஜிஸ்திரேட் தீர்ப்பளிக்கையில் கூறினர்.

## புதிய சங்கத்தில் 3 அரசாங்க எம். பி.க்கள்

கொழும்பு, ஞாயிறு

'சிங்களம் பேசும் எம். பிக்களின் பாராளுமன்ற சங்கம் என்ற சங்கத்தில் மூன்று அரசாங்க எம். பி. க்கள் சேர்ந்துள்ளார்கள்.

வரவுசெலவுத்திட்டத்தை நிதி அமைச்சர் ஆங்கிலத்தில் வாசித்த போது இந்த சங்கத்தைச்சேர்ந்த 6 அங்கத்தவர்கள் வெளிநடப்புச் செய்திருந்தார்கள்.

சகல சிங்கள எம். பிக்களும் பார்லிமெண்டில் சிங்களத்திலேயே பேசவேண்டும் என்பது இச்சங்கத்தின் நோக்கங்களில் ஒன்று.

இந்த சங்கத்தில் சுமார் 20 அங்கத்தவர்கள் இப்போது அங்கத்துவம் வகிக்கிறார்கள்.

# "சந்திரபோஸ் தாயின்மடியில் அறிவற்றநிலையில் கிடந்தார்"

## தச்சன் தோப்பு இரட்டைக்கொலை வழக்கு விசாரணை

சாவகச்சேரி, திங்கள்

'சத்தம் வந்த திசையை நோக்கி நான் ஓடினேன் சதாசிவத்தின் தலையிலிருந்து இரத்தம் வந்துகொண்டிருந்தது. பூபதி சேலையால் பிடித்துக் கொண்டிருந்தார். சந்திரபோஸ் தாயின் மடியில் அறிவற்ற நிலையில் கிடந்தார். நான் சதாசிவத்திடம் என்னநடந்ததென்று கேட்டேன். கந்தையா சச்சிதானந்தன் வெட்டிப்போட்டான் என்று அவர் கூறினர்.

தச்சன்தோப்பு இரட்டைக்கொலை வழக்கு விசாரணையின்போது சாட்சியமளித்த கு. காசிப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பதில் மாஜிஸ்டிரேட் திரு. எஸ். கே. திரவியநாயகம் முன்னிலையில் நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் தச்சன் தோப்பில் இவ்வருடம் ஜூன் மாதம் 12-ம் திகதி நா. சதாசிவம், ச. சந்திரபோஸ் ஆகிய இருவரையும், அதே ஊரைச்சேர்ந்த சகோதரர்களான கே. சச்சிதானந்தம், கே. சிவஞானம் ஆகியோர் கொலைசெய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் திரு. செரிபிம், புறக்டர் ஆர். டி. சிவகுருவின் அனுசரணையுடன் ஆஜரானர். வழக்காளி தரப்பில் அட்வகேட் ரி தம்பித்துரை, புறக்டர் எஸ் பி. மயில்வாகனத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி பொலிஸ் அதிகாரி திரு. ஜியூ. சி. சில்வாவின் உதவியுடன் வழக்கை நடத்தினர். காசிப்பிள்ளைசாட்சியமளிக்கையில்மேலும் கூறியதாவது:—

சம்பவம் நடந்ததினம் நான் தோட்டத்தில் நின்றபொழுது ரோட்டுப்பக்கமாக 'ஐயோ, ஐயோ' என்ற சத்தம் கேட்டது நான் அந்த இடத்திற்கு ஓடிச்சென்றேன். சதாசிவத்தின் தலையிலிருந்து இரத்தம்பாய்ந்தது. பூபதி சேலையால் பிடித்துக் கொண்டிருந்தாள். சந்திரபோஸ் தாயின்மடியில் அறிவற்ற நிலையில் கிடந்தார். நான் சதாசிவத்திடம் என்ன நடந்ததென்று கேட்டபோது கந்தையா சச்சிதானந்தம் வெட்டிப்போட்டான் என்று கூறினர். நான் கார் பிடிக்கச் சென்றேன். கார் இல்லாததால் திரும்பி வந்தேன்.

வைரவன் சுப்பன், நா. சின்னத்துரை ஆகியோர் சாட்சியமளித்தனர். மேல்விசாரணை இம்மாதம் 9-ந் திகதி நடைபெறும்.

# "தேசிய ஐக்கியத்தை மேலும் வலுப்படுத்துகிறது"

## வவனியா எம். பி. கருத்து

யாழ்ப்பாணம், செவ்

"இலங்கைவாழ் சிறுபான்மை மக்கள் தமது உரிமைகளைப் பெற்று இந்நாட்டில் சுபிட்சமாகவாழவேண்டுமானுல் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒத்துழைக்க வேண்டியது அவசியம் என காலஞ்சென்ற டி எஸ் சேனநாயகா யாழ்ப்பாணம் வந்தபொழுது தமிழ் காங்கிரஸ் தெரிவித்தது. ஆனால் அன்று தமிழ் மக்களில் ஒருபகுதியினர் அதனை எதிர்த்தனர். இன்று அவரதுமகன் பிரதமர் டட்லிசேனநாயகா, முதல்தடவையாக யாழ்ப்பாணம் வரும்போது அவரை வரவேற்பதில் தமிழ்மக்கள் எல்லோரும் காட்டும் ஆர்வமும், ஒத்துழைப்பும் தற்பொழுது ஐக்கியம் மேலும் பலப்படுத்தப்பட்டுவிட்டதைக் காட்டுகிறது"

வவனியா, எம். பி திரு. ரி. சிவசிதம்பரம், மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: பிரதமரையும், மந்திரிகளையும், வரவேற்கும் - வரவேற்புக் குழுத் தலைவராக என்னை தெரிவு செய்தது வவனியா மக்களுக்கு பெருமை தரும் விஷயமாகும். வவனியா தொகுதி மக்கள் பிரதமரை வரவேற்பதில், பூரண ஒத்துழைப்பு அளித்துள்ளார்கள்.

வவனியா தொகுதியிலிருந்து நான்கு விசேஷ பஸ்களில் 300 பேர்கள்வரை மகா நாட்டிற்கு வருவார்களென்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்கா சென்றுள்ள தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. எம். சிவசிதம்பரம், கடிதம் எழுதியிருப்பதாகவும், அக்கடிதத்தில், மகாநாடு சிறப்பாக நடைபெற தனது ஆசியைத் தெரிவித்துள்ளதாகவும், வவனியா எம். பி. மேலும் தெரிவித்தார்.

## பதவி ஏற்றார்

கொடிகாமம், திங்கள்

தென்மராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் நிர்வாகப் பொறுப்பை ஓர் காரியதரிசியின் கீழ்விட வேண்டும் என்று சமாசக் கமிட்டி சில மாதங்களின் முன் முடிவு செய்தது. அதன்படி நடைபெற்ற தேர்வில் வரணியைச் சேர்ந்த திரு. மகேந்திரன் காரியதரிசியாகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் ஒருமாதகாலப் பயிற்சியை முடித்துக்கொண்டு இன்று தனது பதவியை ஏற்றுள்ளார்.

## நாட்டிலும் நகரிலும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று அவர்கள் கருதுகிறார்கள். தெய்வங்கள் சினிமா கதா பாத்திரங்களாக வருவதைக் காண சகிக்காமல் அவர்கள் அரசாங்கத்துக்கு ஆட்சேபனை தெரிவித்து பல வெளிநாட்டுப் படங்களை தடைசெய்திருக்கிறார்கள்.

புராணக்கதைகளும் திருஷ்டாந்தக் கருத்துக்கள் நிறைந்த தெய்வ சம்பந்தமான கதைகளும் நமக்கு கிடைத்துள்ள அற்புதமான பொக்கிஷங்கள் என்பது மறுக்கமுடியாத உண்மைதான். அவை தனியாகப் படித்து இன்புறுவதற்கும் பிறர்வாயிலாகக் கேட்டு இன்புறுவதற்கும் உண்டாக்கப்பட்டவை. படம்பிடித்து திரையில் காட்டி, விளம்பரங்களில் அச்சிட்டு கார்களில்ஊர்ஊராகக்கொண்டு திரியப்பட்டு, காலில் மிதிபட்டு, காறி உமிழப்பட்டு விற்பனை செய்வதற்காக உண்டானவையல்ல.

வழிப்போக்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் மலைநாட்டவரின் குடியேற்றம்

மலைநாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வந்து குடியேறினால் தமிழ் பேசும் மக்களின் பலம் மேலும் பன்மடங்கு பெருகுமென்றும், வடக்கில் வேரோடிப் போய் இருக்கும் ஜாதிப் பிரச்சினை வெகுவாக ஒழிந்துவிடுமென்றும் கருத்துப்பட சமீபத்தில் உள்ளூராட்சி அமைச்சர் திருச்செல்வம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறியுள்ளார்.

வடக்கிலும் கிழக்கிலும் தமிழ்பேசும் இனத்தைத் தவிர்ந்தவர்களை திட்டமிட்டுக்கொண்டுவந்து குடியேற்றுவதற்கு கடந்த காலத்தில் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அத்திட்டம் தீவிரமாக அமுல் நடத்தப்படின் தமிழ்பேசும் மக்கள் தங்கள் சொந்த பாரம்பரிய பிரதேசங்களிலேயே சிறுபான்மையினராகிவிடக்கூடும் என்று தமிழரசுக்கட்சிபோன்ற அரசியல் ஸ்தாபனங்களும் வேறு சமூக நிறுவனங்களும் அச்சம் தெரிவித்தன. இந்த நிலைமையைத்தவிர்ப்பதற்கு அமைச்சர் தெரிவித்துள்ள கருத்து பொருத்தமாக விருக்கலாம், மலைநாட்டில் உள்ள தமிழ்பேசும் மக்களை ஏதாவது ஒரு சிறந்த திட்டத்தின் அடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தரிசு நிலங்களாகக்கிடக்கும் பகுதிகளில் குடியேறச் செய்யின், வடக்கு கிழக்கில் தமிழ்பேசும் இனத்தின் பலம் மேலும் அதிகரிக்கும் என்பது உண்மையே ஆனால் அதற்கு அடிப்படையான ஒரு திட்டமும் அவர்களை எங்கெங்கு குடியேற்றுவது என்ற முடிவும் தெளிவாக வேண்டும் மேலும், மலைநாட்டிலுள்ள மக்களில் ஒரு பகுதியினரை மட்டும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் குடியேற்றுவதாயின் அவர்களை மலைநாட்டில் மேலும் சிறுபான்மையினராக ஆக்கிவிடுவதாகும். அப்பொழுது அங்கு வாழுபவர்களின் நிலை முன்னரைவிட சற்று சங்கடமானதாகலாம். வேலையில்லாது திண்டாடுபவர்களையும், வடக்கு கிழக்கில் தாமே இஷ்டமாக வந்து குடியேற விரும்புபவர்களையும் வேண்டுமானால் விதிவான அடிப்படை திட்டம் எதுவுமின்றி வடக்கு கிழக்கில் குடியேற வழிசெய்யலாம்.

மலைநாட்டிலிருந்து தமிழ் பேசுகின்றவர்கள் வடக்கு கிழக்கில் வந்து குடியேறுவதைப் பொதுவாக சிங்களவர்களும் வரவேற்பார்கள். ஏனென்றால் தமிழர் மலைநாட்டில் எண்ணில் குறைவதை அங்குள்ள அரசியல்வாதிகளுக்கு மகிழ்ச்சியே அளிக்கும்.

மலைநாட்டில் எண்பது சதவிகிதத்தினர் தாழ்த்தப்பட்டவர்கள் என்றகூற்றில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பது ஒருபுறமிருக்க அங்கு ஜாதிபாகுபாடு இல்லையென்று சொல்வதற்கில்லை. உயர்பதவிகளுக்கும் உத்தியோகங்களுக்கும் உயர்ந்த ஜாதிப்என்று கூறிக்கொள்பவர்களையே நிர்வாகிகள் நியமிக்கும் பழக்கம் இன்னும் மறைந்துவிடவில்லை. ஆனால் வடக்கில்போல அன்றி அங்கு உயர்ந்தநிலையில் உள்ளவர்கள் மனம் வைத்தால் ஜாதிவித்தியாசங்களை சிரமமின்றி ஒழித்துவிடலாம். இப்பொழுதும்கூட எவரும் முன்னின்று உழைக்காமலே ஜாதிப்பேயின் நர்த்தனம் அங்குவெகுவாகக் குறைந்துவிட்டது. இன்னும் ஒருசில ஆண்டுகளில் ஜாதிவித்தியாசமே தோட்டப் பகுதிகளில் என்னவென்று தெரியாமல் போய்விடலாம். அமைச்சர் அவர்கள் கூறியிருப்பதுபோல ஜாதிப்பாகுபாடுகளை ஒழிப்பதற்கு சட்டமும் வருமானால் மலைநாட்டில் ஜாதி என்பதையே முற்றாக ஒழித்துவிடலாம்.

--பேணு

# பகடைக்காயாகப் பயன்பட்ட இலங்கை – இந்திய பிரச்னை

இந்த நாட்டின் அல்லது வேறு எந்த ஒரு நாட்டின் சுபீட்சம், பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி அனைத்தும், நாட்டின் தொழிலாளர் சமூகத்தின் கையிலேதான் தங்கியிருக்கிறது. எங்களுடைய நாட்டைப் பொறுத்தவரை இது ஒரு விவசாய நாடு. தேயிலை, றப்பர், தென்னை முதலிய விவசாயங்களைக் கொண்டு இந்நாட்டு அரசாங்கம் ஜீவனம் நிறைந்து வருகின்றது. எங்களுடைய நாட்டைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுடைய சட்டங்கள், அவர்களுடைய நிலைமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதுமுக்கிய விஷயமாகும்.

## புதுச்சட்டங்கள்

பாட்டாளிவர்க்கம் இந்த நாட்டிலே ஆட்டங்கொள்ளாதிருக்க அவர்களுக்குச்சகல விதமான வசதிகளையும் சட்டத்தின் மூலம் அளிப்பதே அரசியல் ஆட்சியாளரின் அடிப்படைக்கொள்கையாக இருக்க வேண்டும். அந்த ரீதியிலே இலங்கையிலேயுள்ள தொழிலாளர் சமுதாயத்திற்கு தேசிய அரசாங்கம் செய்திருக்கின்ற சேவைகளை நாம் ஆராய்ந்து பார்க்கப்போனால், இடம் தெரியாமல் இருந்த தொழிலாளர் வர்க்கம் பலனிதமான நன்மைகளைப் பெறுவதற்கு பல சட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. உழைப்பாளிகளுக்கு உரிய இடம் அளிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு உழைப்பாளிகள் ஆதாயத்தில் பங்கு பற்றும் நாள் வெகுதூரத்தில் இல்லையென்பதைச் சிம்மாசனப் பிரசங்கம் சுட்டிக்காட்டியிருக்கின்றது. தொழிலாளர் சமுதாயத்துக்கு எவ்வளவு பெரிய நன்மைகளைச் செய்து, அச்சமுதாயத்துக்கு வேண்டிய பல உதவிகளையும் சட்டத்தின் மூலமாகக் கட்டுப்படுத்திக் கொண்ட அந்தப் பெருமை தேசிய அரசாங்கத்துக்கு மாத்திரமன்றி தேசிய அரசாங்கத்தின் ஒரு அம்சமாக இயதொழில்மந்திரிகௌரவ முகம்மது அவர்களையும் சார்ந்ததாகும்.

## திட்டங்கள்

இந்த நிலைமையிலேதான் தேசிய அரசாங்கம் கடந்த ஒரு ஆண்டுகாலமாகப் பல நன்மைகளைத் தொழிலாளர் சமுதாயத்துக்குப் புரிந்திருக்கிறதென்பதை இச்சபையிலே கூறுவதற்கு ஆசைப்படுகின்றேன். அதே நேரத்தில் சிம்மாசனப் பிரசங்கத்தில் நிகழ் வருட நிருபணமொன்று இருக்கின்றது. அடுத்த ஓர் ஆண்டுக்காலத்தில் இந்நாட்டிலேசெயலாற்றப்பட வேண்டிய திட்டங்கள் பல இருக்கின்றன. அத்திட்டங்களின் எல்லாவற்றையும் இங்கே ஆராயாமல் ஒரு சில பிரச்னைகளைப்பற்றி மாத்திரம் ஆராயவிரும்புகிறேன். முதலாவதாக இலங்கைஇந்திய ஒப்பந்தச் செயலாற்றுச் சட்டம் பற்றி இங்கே ஆராய்கின்ற நேரத்திலே ஒரு முக்கியமானவிடயத்தைச் சொல்லுவதற்கு விரும்புகிறேன்.

## இலங்கை இந்திய பிரச்னை

இந்த நாட்டிலேயுள்ள அரசியல் வாதிகளைப் பொறுத்தவரையில், இலங்கைஇந்தியப் பிரச்னை ஒரு அரசியல் சூதாட்டமாகக் கடந்த காலத்தில் கையாளப்பட்டு வந்தது. ஒவ்வொருசமயத்திலும் நாட்டு மக்களின் மத்தியிலேதேர்தலுக்குப்போன தருணங்களில் எல்லாம் இந்த நாட்டிலே மக்கள்முன் உண்மையைப் பேசித் தேர்தலில் வெற்றிபெற முடியாதவர்கள், அவர்கள் கையா

### செனட்டர் ஜெகதாசன்

ண்ட பல சூதாட்டங்களின் மத்தியில் இலங்கை இந்திய பிரச்னையையும் கையாண்டார்கள் நாம் ஆட்சிக்கு வந்துவிட்டால் அல்லதுநாம் பாராளுமன்றத்திற்குப் போய்விட்டால் அதிலிருந்து எங்களுடைய கட்சி ஆட்சிக்கு வந்துவிட்டால், இந்நாட்டிலே இருக்கின்ற இந்திய வம்சாவழியினரை உதைத்துஇந்நாட்டைவிட்டு விரட்டிவிடுவோமென்றவிஷமப் பிரசாரத்தை மக்களின் மத்தியில் பரப்பி, அதன் மூலமாகத் தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் பலபேர்கள் இந்த நாட்டிலே இருக்கின்ற [illegible] தேர்தலிலே பிரசாரங்களைச்

(8-ம் பக்கம் பார்க்க)

# இறந்தவர்களுக்காக --- --- துக்கப்படலாமா?

— விஜயா சங்கரநாராயணன் —

மனிதன் பிறக்கிறான், உடலில் உயிர் உள்ள அளவும் வாழ்கிறான். உயிர் பிரிந்தபின் இறக்கிறான். இறந்தபின் உடல் சாம்பராய் அல்லது மண்ணோடு மண்ணாய் மறைந்துவிடுகின்றது. ஆனால் உயிர் உடலில் இருந்தபோது கண்ணுக்குப் புலனாகாத நுட்ப சக்தியாய் விளங்கும் அது உடலை விட்டகன்றபின் சக்தியிழந்துவிடுகின்றதா அல்லது வேறொரு உடலில் புகுந்து விடுகின்றதா அல்லது வேறுலகம் சென்றடைகின்றதா? மகான் ஸ்ரீ அரவிந்தரின் தத்துவக் கருத்துக்களை விளக்குகிறார் இங்கு கட்டுரையாளர்.

இந்த அளப்பரிய அதிசய உலகில் ஒவ்வொன்றுமே ஓர் அதிசயம்தான். ஒரு புதிர்தான், ஞாயிறு எப்படி, ஏன் தோன்றியது? பூமி ஏன் அதைச் சுற்ற வேண்டும்? புழுவாக இருந்த ஜந்து சிந்திக்கும் மனிதனாக எப்படி ஏன் மாறிற்று? 'எப்படி?' என்ற இம்மாதிரிக் கேள்விக்கு ஒருவாறாக விஞ்ஞானம் விடை கண்டுபிடித்துவிட்டது. ஏன் என்ற கேள்விக்கு விஞ்ஞானத்தால் திட்டவட்டமாக விடைகூறிவிட முடியாது. உள்ளொளி படைத்த மெய்ஞ்ஞானியே இதற்கு விடை கூறக்கூடும்.

## தெய்வத்தின் களிப்பு

தெய்வம் தன்னைப் பல கூறாகப் பிரித்துத் தன்னைத் தானே கண்டு களிக்கவே உலகங்களைப் படைத்தது என்று நமது நாட்டு ஞானிகள் கூறுகின்றனர். மனிதன் விவாகம் செய்துகொண்டு தன் கிளைகளைக் கண்டு ஆனந்தமடைவதில்லையா? இதைத்தான் நாம் ஒருவாறான உதாரணமாகக் கொள்ள முடியும். அதன்படி நாம் ஒவ்வொருவரும் உலகை இயக்கும் அம்மாபெரும் சக்தியின் அம்சங்களே.

அந்த மாபெரும் சோதியின் சிறுபொறிகளான நாம் ஏன் மீண்டும் மீண்டும் பிறந்து இறக்கவேண்டும் என்பதுதான் சிந்தனைக்குரிய விஷயம். மஹான் ஸ்ரீ அரவிந்தர் இதை விண்டு ஆராய்ந்து நமக்கும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார்.

## சிருஷ்டியின் நோக்கம்

பிரபஞ்சத்தின் ஆதிமூலமாம் பரம்பொருளுக்கு ஓர் உள்நோக்கம் உள்ளது. ஜடமாகிய பூதவுலகிலும் அமர ஆட்சி நடத்துவதே அந்த நோக்கமாகும். பூவுலகம் இதற்குச் சரியாக தகுதியுள்ளதாக அமையவேண்டும். இதன் உள்ளுக்கு உள்ளே பொதிந்து கிடக்கும் சின்மய தத்துவம் வெளிப்படவேண்டும். பின்பு அந்தப் பரமன் புரியும் செயல்களை ஏற்கத் தயாராகிநிற்க வேண்டும். இதற்காகவே பூவுலகில் சிருஷ்டி தோன்றிப்படிப்படியாக முன்னேறி வருகிறது.

பரிணாம காரியத்திற்கு (Evolution) உட்பட்டு ஜீவன் ஒவ்வொரு முறையும் ஒரு பிறப்பெடுக்கிறது அப்போதெல்லாம் அதற்கென ஒரு மனம், பிராணன், தேகம் முதலியவை தோன்றுகின்றன. இவை பிரபஞ்ச தத்துவங்களிலிருந்து உருவாகின்றன. ஜீவனின் கடந்த காலம் பரிணாமத்தையொட்டியும், அதனுடைய எதிர்காலத் தேவையை முன்னிட்டும், இவை அமைகின்றன.

## மனிதனின் மூன்று கூறுகள்

மனிதனை மூன்று கூறுகளாகப் பிரிக்கின்றனர். ஸ்ரீ அரவிந்தர் அவற்றை முறையே (Physical) பௌதிகம், (Vital) பிராணமயம், (Mental) மனோமயம் என்று கூறுகின்றார். இந்தக் கூறுகளை உருவாக்கும் மூலப்பொருள்கள் பிரபஞ்சத்தில் படிவங்களாக அமைந்துள்ளன. பௌதிகப் படிவத்திலிருந்து பௌதிக சம்பந்தமான யாவும் மனிதனை வந்தடைகின்றன. பிராணமயபடிவத்திலிருந்து பிராணமய ஆற்றல்கள் வருகின்றன. இவையே மனிதனின் ஆசாபாசங்கள் உணர்ச்சிகள் யாவற்றையும் இயக்குகின்றன. மூன்றாவதாக, மனோமய படிவம்— இதிலிருந்து மனோமய சக்திகள் உண்டாகின்றன சிந்தனை, அறிவு ஆகியவற்றை இதுவே ஏற்கிறது. இவற்றுக்கெல்லாம் அப்பால் உள்ளது சைதன்ய உலகம் என்னும் உயர்தரப் படிவம். அங்கிருந்துதான் ஜீவன் வருகிறது.

## ஜீவன் செல்லுமிடம்

மனிதஉடல் அழிந்தவுடன் அவனது பிராணமயம் பிராணமயப் படிவத்தில் சென்று சிறிது காலம் தங்குகிறது. பிறகு இந்த பிராணமய உறை கரைந்து போகிறது. கடைசியாகக்கரைவதுமனோமயம் தான், இதன்பின் ஜீவன் ஜீவ லோகத்தைப் போய்ச்சேருகிறது. அங்கு அடுத்த பிறவியெடுக்கும் வரை ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும், அதாவது உயிர் போகும் பொழுது முதலில் பௌதிக உறையைக் கழற்றிப்போடுகிறது; பிறகு பிராணமய உறையையும் அதன்பின் மனோமய உறையையும் கழற்றுகிறது இதுவே சாதாரண நியதி.

ஆனால் ஜீவனின் பிராணமய மனோமய உடல்கள் ஒரு பிறவியுடனே அழிந்துதான் போகவேண்டும் என்பதில்லை, பக்குவமடைந்தசில ஜீவன்களின் மனம் ஜீவனுக்குத் தகுந்தவாறு முதிர்ந்து தேறியிருக்கும். அது அழியாமல் தங்கிவிடக்கூடும். பிராணமய உடல்கூட ஜீவனின் நோக்கத்தையொட்டி அதனையே சூழ்ந்திருக்குமானால் அதுவும் அழிவதில்லை. ஜீவனின் அமரத்தன்மை அவற்றுக்கும் கிட்டிவிடும்.

ஒவ்வொரு பிறவியிலும் ஜீவன் அந்த வாழ்விலே நேரும் அனுபவங்களின் சாரமான தத்துவத்தைக் கிரகித்துக்கொள்கிறது. அதையே தனது பரிணாம வளர்ச்சிக்கு அடிப்படையாக்கிக் கொள்கிறது. பல உலகங்களிலும் பல அனுபவங்கள் பெற்று சைதன்ய உலகுக்கு ஜீவன் வந்து சேர்ந்ததும் அங்குஓய்விலிருந்துகொண்டு தனது அடுத்த பிறவிக்காகத் தன்னைத் தயார் செய்துகொள்ளும் இந்தத் தயாரிப்பில் தான் அதன் அடுத்த பிறவியின் சூழ்நிலை, ஆளுமை (Personality) யாவும் தீர்மானிக்கப்படுகின்றன.

## மரணசமயத்தில்

தனது அடுத்த பிறவி எவ்வாறாக இருக்க வேண்டும் என்பதை மரண சமயத்திலேயே ஜீவன் நிச்சயிக்கிறது. அதற்குத் தகுந்தவாறு சைதன்ய லோகத்தின் அது தன்னைத் தயாரித்துக்கொள்கிறது.

## இறந்த பின்னர்

மரண சமயம் பலருக்குப் பல வகையாக இருக்கும். சிலருக்கு இறந்தபின்னும்தான் இறந்ததாகவே தெரியாது. அதை உணருவதற்குச் சற்றுத் தாமதம் ஆகும். எதிர்பாராது ஏற்படும் மரணமே இதற்குக் காரணம் அநேகருக்கு மரண சமயத்தில் மனம் ஓர் இருண்ட நிலைக்குவந்துவிடும் அப்போது தாம் எங்கு இருக்கிறார், என்ன நடக்கிறதென்பதே அவர்களுக்குத் தெரியாது. வேறு சிலரோ தமது பிரயாணத்தை முழு உணர்வுடன் தொடங்குவார்கள், ஜீவன் தலைவழியாகவே வெளியேறும். வெளியேறிய ஜீவன் உடலையும் சுற்றுப்புறச் சூழ்நிலைகளையும் உடனே விட்டு விட்டுப் போவதில்லை. பிராணமய உடலில் அது அந்த ஸ்தலத்திலேயே தொங்கிக் கொண்டிருக்கும். இது எட்டு நாள்வரை நீடிக்கலாம் என்று ஸ்ரீ அரவிந்தர் சொல்லுகிறார். இவர்கள் பிராணமய உடலைச் சுலபமாக விட்டுவிட்டுச் சுகமாகப் பிரயாணம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில்தான் மந்திரங்களும் அந்தியக் கிரியைகளும் ஏற்பட்டன. சில சமயம் ஜீவன் இரண்டு மூன்று வருஷங்கள்வரை கூட பௌதிக சூழலிலேயே இருக்குமாம். இறப்பவரைக் குறித்துத் துக்கப்படுவதும் அழுவ

(8-ம் பக்கம் பார்க்க)

# பொன் வயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட மகளிர் பாடசாலைகள் விளையாட்டுப் போட்டி

# வேம்படி மகளிருக்கு முதலிடம்; எட்டு புதிய சாதனைகள்!

## நித்தியவதியின் உயர்ந்தசாதனை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். மாவட்ட மகளிர் பாடசாலைகள் பங்குபற்றிய அமச்சூர் சாம்பியன் விளையாட்டுப் போட்டியில் இம்முறை 8 புதிய சாதனங்கள் நிலைநாட்டப்பட்டன. 15 பாடசாலைகள் பங்குபற்றிய இப்போட்டியில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி 259 புள்ளிகள் பெற்று முதலாம் இடத்தையும் பெற்றது. மற்றும் திறமையாகப் போட்டியிட்ட சுண்டிக்குளி மகளிர் கல்லூரி 206 புள்ளிகளும், உடுவில் மகளிர் கல்லூரி 96 புள்ளிகளும், மானிப்பாய் மகளிர் கல்லூரி 59 புள்ளிகளும், கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயம் 45 புள்ளிகளும் முறையேபெற்றன.

புதிய சாதனைகள் நிலைநாட்டிய வீராங்கனைகளில் வேம்படி மகளிர் கல்லூரியைச்சேர்ந்த 13 வயதான நித்தியவதி ஜெயசிங் மூன்று பிரிவுகளிலும் அதிஉயர்ந்த சாதனைகளை நிலைநாட்டியது பாராட்டக்கூடியது. இவர் நீளம் பாய்தல்ல் கீழ்ப்பிரிவில் 14 5 1/4'' தூரத்தைப் பாய்ந்து முதலிடத்தைப்பெற்ருர். மற்றும் மேற்பிரிவில ஞானம்பிகை கனகரெத்தினமும், மத்திய பிரிவில் சாந்தா இரத்தின சிங்கமும், கீழ்ப்பிரிவில் சரோஜினி நடராசாவும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

முக்கிய போட்டிகளில் வெற்றிபெற்ரோர் விபரங்கள் பின்வருமாறு:-

குண்டெறிதல் போட்டி (மத்தியபிரிவு): எம். பெரியதம்பி எம் சந்திரகாந்தா, எம். வரலெட்சுமி.

150 யார் ஓட்டம் (கீழ்ப்பிரிவு): சரோஜனி நடராசா, எம். நாகராசா, கே. நடராசா.

மத்திய பிரிவு; சாந்தா இரெத்தினசிங்கம், எம் அரசரெத்தினம், ஜே. சண்முகம்.

200 யார் ஓட்டம்: (மேற்பிரிவு) எம். இராசசிங்கம், எஸ், உத்தமராணி, எம். திசநாயகம்.

நீளம்பாய்தல்: (கீழ்ப்பிரிவு) நித்தியவதிஜெயசிங், சரோஜினி நடராசா, எஸ், ஜெயந்தி.

ஈட்டி எறிதல்: (மேற்பிரிவு) என். திருச்செல்வம், ஞானம்பிகை கனகரெத்தினம், எஸ். ஆறுமுகம்.

100 யார் ஓட்டம்: (மேற்பிரிவு) எம். இராசலிங்கம், எஸ். உத்தமராணி, பாலகங்காதரசிவம்.

மத்திய பிரிவு: சாந்தா ரெட்னசிங்கம், எம். அரசரெத்தினம், ரி. சிவக்கொழுந்து.

கீழ்ப்பிரிவு: சரோஜினி நடராசா, வி. மகாதேவா, எம். ரெட்னசிங்கம்.

உயரம்பாய்தல்: (கீழ்ப்பிரிவு) வி. திலகா. கே நடராசா, பி. கமலாவதி.

நிளம்பாய்தல்: (மத்திய பிரிவு) ஜி. நகுலேஸ்வரி. ஆர். ராசலிங்கம், எஸ், குழந்தைவேலு.

பரிதிவட்டம் வீசுதல்: (மேற்பிரிவு) ஞானம்பிகை கனகரத்தினம், செல்வாச்சி எஸ். ஜெயரெட்ணம்.

குண்டெறிதல்: (மேற்பிரிவு) ஞானம்பிகை கனகரெத்தினம், வி. அம்பலவாணர். எஸ். ஆறுமுகம்.

பரிதிவட்டம் வீசுதல். (மத்திய பிரிவு) ஜே. சண்முகம்ஜ வைத்திலிங்கம், எஸ் கணேசன்.

நீளம்பாய்தல்: (மேற்பிரிவு) எஸ். உத்தமராணி, செல்வலக்குமி, எம். ராஜலிங்கம்.

உயரம்பாய்தல்: (மத்திய பிரிவு) எஸ் யோகலக்சுமி, ஐ. வைத்திலிங்கம், டி. காசிப்பிள்ளை.

80 யார் தடை ஓட்டம்: (மேற்பிரிவு) ஐ. கனகசபை, எல். பாலசிங்கம், பி. சிவகுரு.

மத்தியபிரிவு: பி. வீரசிங்கம். ஜே செல்வரெட்ணம், கே. குலசேகரம்.

கீழ்ப்பிரிவு: ரி. பரமானந்தம், எஸ் நவரெட்னராசா, எம். பரமானந்தம்.

இப்போட்டிகள் தொடர்ந்து இருநாட்களாக யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் பாரியார் திருமதி லொறேன் அபயசேகர பரிசில்களைவழங்கினர்.

யாழ் மாவட்ட

## கூட்டுறவு சமாஜ கலைப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். மாவட்ட கூட்டுறவு சமாஜத்தினரால் நடத்தப்பட்ட கலைப்போட்டிகளில் வெற்றி பெற்ரோர் விபரம் வருமாறு:

தனிப்பாடல்போட்டி- மேற்பிரிவு: (பெண்கள்) அருந்ததி சிவசுப்பிரமணியம், ஆ கிரீடா, கனகசபாபதி பாப்பா. கீழ்ப்பிரிவு: (பெண்கள்) சத்திய தேவி குருநாதபிள்ளை, இ. சுசிலாதேவி, இ. சிவயோகராணி. மேற்பிரிவு: (ஆண்) க பிரான்சிஸ். கீழ்ப்பிரிவு: (ஆண்கள்) வி. ஸ்ரீ. நாதன், பலம்போதரன், நீ இங்ஸ்லி சாள்ஸ்.

பேச்சுப்போட்டி- மேற்பிரிவு: (ஆண்கள்) எஸ். சண்முகவடிவேல், அ அமிர்தநாதர், அ சிவகுருநாதன். கீழ்ப்பிரிவு: (ஆண்கள்) ச செ தங்கராசா, ந அன்ரனி, ம. குணநேசன். மேற்பிரிவு: (பெண்கள்) லோ. புலோறன்ஸ், நந்தினி சிவதாசன், சரோஜினிதேவி அரியரத்தினம். கீழ்ப்பிரிவு: (பெண்கள்) ஜோ. பிரகாசியம்மா,

(8-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை கம்பன் கழகம்

'ஈழநாடு' ஆதரவோடு நடாத்தும்

## கம்பராமாயண நாடகப்போட்டி

இவ்வாண்டு செப்டம்பரில் இலங்கைக் கம்பன் கழகம் தனது மூன்ருவதாண்டு விழாவைவொட்டி ஒரு நாடகப் போட்டியை ஈழநாட்டின் ஆதரவோடு நடாத்த முன்வந்துள்ளது. இந்நாடகப் போட்டியில் கலந்துகொள்வோர் விண்ணப்பம் அனுப்பவேண்டிய கடைசித் தேதி 15-8-66 எனப் பின்போடப்பட்டுள்ளது. நாடகப்போட்டி நிபந்தனைகள் வருமாறு:-

2. கம்பராமாயணத்தை அடியொற்றிய ஒரு மணித்தியால ஒற்றையங்க நாடகங்களை மேடையேற்றுவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் இந்நாடகப் போட்டி நடாத்தப்படும்.

2. இப்போட்டியில் இலங்கையின் எப்பகுதியிலுமுள்ள பாடசாலைகளும் நாடக மன்றங்களும் கலந்துகொள்ளலாம்.

3. நாடகம் சில காட்சிகளில் கம்பனின் கவிச்சுவையும், காவியச்சுவையும் பொலிய அமைதல் விரும்பத்தக்கது.

4. நாடகப்பரிசில்கள், மன்றங்களுக்கும் பாடசாலைகளுக்கும் தனித்தனி வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| முதற்பரிசு | — 150 | ருபா |
| இரண்டாவது பரிசு | — 100 | ருபா |
| மூன்ருவது பரிசு | — 75 | ருபா |

5. நாடகங்களின் முதற்றெரிவு யாழ்ப்பாணத்தில் நகரமண்டபத்திலோ. வேறு கல்லூரி மண்டபம் ஒன்றிலோ நடைபெறும் போதிய நாடகங்கள் கொழும்பு, மட்டக்களப்பு, கண்டி முதலாமிடங்களிலிருந்து மேடையேற்றப்படுமாளுல் அவற்றிற்கான முதல் தெரிவு அவ்விடங்களிலே, கம்பன்கழக நடுவர்களால் நடாத்தப்படும்.

6. யாழ்ப்பாணத்தில் முதற்றெரிவோ, இறுதித்தெரிவோ நிகழும் போதும், கம்பன்விழாவிலே முதன்மை பெறும் நாடகங்கள் மேடையேறும்போதும் நடிகர்கள் முதலானேர் வருதற்கான பயணச்செலவு வழங்கப்படமாட்டாது.

7. நாடகங்கள் கம்பன் விழாவில் மேடையேற்றப்படும் மூன்று நாட்களிலும் நாடக மேடையலங்காரம் திரை, பக்கவாத்தியம் முதலியன கழகத்தாரால் வழங்கப்படும்.

8. நாடகங்கள் எக்காரணத்தைக்கொண்டும் ஒருமணித்தியாலத்திற்கு மேற்பட்டிருத்தில் கூடாது.

9. நாடகப்பரிசில்கள் கம்பன்விழாவில் வைத்து கலைநிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்க சம்மதித்துள்ள கவிஞர் கண்ணதாசனல் வழங்கப்படும்.

10. நாடகப்போட்டியிற் கலந்துகொள்ளும் மன்றங்களும், பாடசாலைகளும் தமது விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய இறுதித்தேதி 15-8-66. அனுப்பவேண்டிய முகவரி;-

க. சொக்கலிங்கம்,
கம்பராமாயாண நாடகப்போட்டி அமைப்பாளர்,
இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## நாடக பிரதிப் போட்டி

இதனுடன் மேடையேற்றப்படும் நாடகங்களின் பிரதிகளிற் சிறந்த மூன்று பிரதிக்கான பரிசில்களும் வழங்கப்படும். இப்பரிசில்களும் முறையே 150/-, 100/-, 75/- ஆகவே இருக்கும். தெரியப்படும் சிறந்த நாடகங்கள் ஈழநாட்டில் தொடர்ந்து வெளியிடப்படும்.

நாடகப் பிரதிகள் அனுப்பவேண்டிய முகவரி:
ஆசிரியர், ஈழநாடு வாரமலர்,
ஈழநாடு,
யாழ்ப்பாணம்.

யாழ். மாவட்டதேசிய பாடசாலைகள் விளையாட்டுப் போட்டிகள்

# கொழும்புத்துறை ரே.க. பாடசாலை அச்சுவேலி சென். திரேசாசாம்பியன்

## எஸ். ஈஸ்வரி, எம். அருணு வீராங்கனைகளாகத் தெரிவு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். மாவட்ட தேசிய பாடசாலைகள் மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி யாழ். மத்தியகல்லூரிமைதானத்தில் திரு ஆர். எஸ். சிவரெத்தினம் தலைமையில் நடைபெற்றது. வடமாகாணத்தைச்சேர்ந்த பாடசாலைகள் பங்கு பற்றிய இப்போட்டியில் பெண்களுக்கிடையேயான போட்டியில் அச்சுவேலி சென். திரேசா பாடசாலையும், ஆண்களுக்கிடையேயான போட்டியில் கொழும்புத்துறை ரோமன் கத்தோலிக்க பாடசாலையும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

ஆண்கள் போட்டியில் கொழும்புத்துறை ரோமன் கத்தோலிக்க பாடசாலை 52 புள்ளிகளும், மீசாலைவீரசிங்கம்வித்தியாசாலை 33 புள்ளிகளும், பெண்கள் போட்டியில் அச்சுவேலி சென். திரேசா பாடசாலை 41 புள்ளிகளும், யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ்பாடசாலை 22 புள்ளிகளும் முறையே பெற்றன. பெண்கள்போட்டியில் கொடிகாமம் கச்சாய் அரசினர் பாடசாலையைச்சேர்ந்த எஸ். ஈஸ்வரி மேற்பிரிவில் விளையாட்டு வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் 200 யார் தூரத்தை 33.4 செக்கனில் ஓடிமுடித்தது குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் போட்டியில்திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையைச் சேர்ந்த எம். அருணு விளையாட்டுவீரராகத் தெரிவுசெய்யப்பட்டார். மேற்பிரிவைச்சேர்ந்த இவர் உயரம் பாய்தலில் 5அடி 6அங்குல தூரத்தைப் பாய்ந்தது குறிப்பிடத்தக்கது.

சிலமுக்கிய போட்டிகளில் வெற்றி பெற்ரோர் விபரம் வருமாறு:—

100யார் ஓட்டம்: மேற்பிரிவு ஆண்கள்:-நா பற்குணராசா, சி சிவலிங்கம், க மகாலிங்கம் மத்தியபிரிவு:- எம் தெய்வேந்திரன், எவ் அலோசியஸ், இ அரியரெத்தினம். கீழ்ப்பிரிவு:- பி பிரகாபன், பி எல் போல்ரன், ஆர் கணேசராச .

பெண்கள்: மேற்பிரிவு:- சி விஜயராணி, எஸ் மங்களம், இ அம்பாள்துணை. மத்தியபிரிவு:-கே சுன்ம்மா, வே லீலாவதி, எஸ் பாக்கியலெட்சுமி. கீழ்ப்பிரிவு:- கு அம்பிகை, சி சேதுப்பிள்ளை, பூவியற்மக்லின் இந்திரா.

800யார் ஓட்டம்: ஆண்கள் மேற்பிரிவு:- அ பஞ்சாட்சரம், சி சிவலிங்கம், வை. அமரசிங்கம்,

200யார்ஓட்டம்: ஆண்கள் மேற்பிரிவு:- எஸ் ஏ கிறேசியன், த குணசிங்கம், கே விஸ்வரெத்தினம். மத்தியபிரிவு: எம் தெய்வேந்திரம், எவ் அலோசியஸ், க நாகேந்திரம்

பெண்கள்: மேற்பிரிவு:- ச ஈஸ்வரி, எஸ் மங்களம், இ அம்பாள்துணை. மத்திய பிரிவு: சீ மே எலிசபெத் லீலா, கே சுவினம்மா, எஸ் பாக்கியலெட்சுமி.

150யார் ஓட்டம்: மத்திய பிரிவு: ஆண்கள்:-பி பிரபாகன், பி எல் போல்ற்ரன், ஆர் கணேசராசா.

குண்டெறிதல்: மேற்பிரிவு ஆண்கள்:-எஸ் அச்சுதபாத சுந்தரம், எஸ் யேசுதாசன், அ கணபதிப்பிள்ளை.

உயரம்பாய்தல்: மத்திய பிரிவு ஆண்கள்:- க முத்துலிங்கம், மா அண்ணுமலை. சி சற்குணமூர்த்தி.

நீளம்பாய்தல்: மத்திய பிரிவுஆண்கள்:- எம செபஸ்தியாம்பிள்ளை, க நாகேந்திரம், பொ தவராசா. மேற்பிரிவு:-வீ மரியதாஸ், வ ஸ்ரீறங்கநாதன், வீ குமாரசிங்கம்.

பரிதிவட்டம் வீசுதல் மேற்பிரிவ ஆண்கள்:- கே வில்வரெத்தினம், மா சற்குணசிங்கம், இ சின்னராசா.

உயரம்பாய்தல்: மேற்பிரிவு ஆண்கள்:- எம் அருணு நா பற்குணராசா, கே வில்வரெத்தினம்.

நீளம்பாய்தல்: கீழ்ப்பிரிவு ஆண்கள்:- என் மரியதாஸ், ந பரராசசிங்கம், சே கனகரெத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு அதிக அரசாங்க ஊழியர்?

## சிங்களத் தேர்ச்சி பெருதவர்களுக்கு வாய்ப்பு

கொழும்பு, திங்கள்

அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் அரசாங்க ஊழியரின் வருடாந்த இடமாற்றமும், உத்தியோக நியமனமும் இடம்பெறும் சமயம், சிங்களத்தில் அல்லது தமிழிலும் ஆங்கிலத்திலும் மட்டும் தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் பெரும்பாலானோர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாற்றப்படுவரெனத் தெரிகிறது.

திறைசேரி கணிப்பின்படி, எண்ணூயிரத்துக்கும் மேற்பட்ட அரசாங்க ஊழியர் சிங்களத்தில் தேர்ச்சி பெருதவர்.

பொதுச் சேவையில் உள்ள பழைய ஊழியர்களின் பதவி உயர்வுக்குச் சிங்களத்தில் தேர்ச்சி வேண்டுமென்ற நியதியை எடுத்துவிட அரசாங்கம் தீர்மானித்ததைத் தொடர்ந்து பல அரசாங்க இலாகாத் தலைவர்கள் தமது இலாகாக்களில் சிங்களத்தில் வேலை செய்ய முடியாமையின் காரணமாகப் பல ஊழியர்கள் செயலற்று இருப்பதாகத் திறைசேரிக் காரியதரிசிக்கு அறிவித்துள்ளனர்.

இந்த உத்தியோகத்தர்களைச் சிங்கள, தமிழ் மொழிகளில் போதிய அளவு வேலை உள்ள அமைச்சுகளுக்குப் பிரித்தனுப்ப திறைசேரி இப்பொழுது ஒரு திட்டத்தை உருவாக்கிவருகிறது. மிகுதி உத்தியோகத்தர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டுக்கும் அனுப்பப்படுவர்

கொழும்பிலுள்ள அமைச்சுகள், இலாகாக்களுக்கு சிங்கள மொழிபெயர்ப்புகள் அனுப்பவேண்டியதன் காரணமாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களத் தேர்ச்சிபெற்ற ஊழியர்களை நியமிக்கவேண்டிய அவசியம் இருந்துவருகிறது.

ஜனவரி 1-ம் திகதியில் அமுலுக்குவரும் இடமாற்றங்களை அவ்வவ்வுத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்காக, முன்னதாகவே நேரத்துடன் ஊழியர் ஜாபிதாக்களைச் சமர்ப்பிக்கும்படி திறைசேரிக் காரியதரிசி திரு. ஜினதாச சமரக்கொடி எல்லா நிரந்தரக் காரியதரிசிகளையும் கேட்டுள்ளார்.

## ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டம்

காரைநகர், திங்கள்

அரசினர் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் கூடியபொழுது வடபிராந்திய அரசினர் ஆசிரியர் சங்க வருடாந்த கூட்டத்தை இம்மாதம் 24-ம் தேதி கூட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

தொழிற்சங்க உரிமைகளை அரசாங்கம் புறக்கணியாது இருப்பதற்குத் தாழ்ச்சங்கம் ஏற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேறியது.

---

## கூப்பனுக்கு உயர்ந்த ரகத் துணி கிடைக்கும்?

கொழும்பு, திங்கள்

கூட்டுறவு மொத்த விற்பனவு நிலயம், வாடிக்கையாளருக்கு விரைவில் விலை உயர்ந்த ரகத் துணிமணிகளை அளிக்குமெனத் தெரிகிறது. ஏற்கனவே இவைகளுக்கான ஓடர்களைச் செய்துள்ளதெனவும், இம்மாதத்தில் அவை இங்கு வந்துசேருமென்றும் தெரிகிறது.

ஆனால் இத்துணிமணிகளை ஆகஸ்ட்மாதம் 10-ம் திகதி வரை பெறுமதியுள்ள கூப்பன் இல. 97-ல் பெறமுடியாதென கூட்டுறவு விற்பனவு நிலைய பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். ஆகஸட் 11-ம் திகதியிலிருந்து அமுலாகும் புதிய இரண்டு கூப்பன் இலக்கங்களுக்கும் இவற்றைப் பெறலாமெனத் தெரிகிறது.

---

## 618 வது பூமி அதிர்ச்சி

மாஸ்கோ, ஆகஸ்ட் 1

ரஷ்யாவிலுள்ள மத்திய ஆசியக் குடியரசான தாஷ்கன்டில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. நேற்றுவிடியற்காலை 4.30 மணியளவில் ஏற்பட்ட அதிர்ச்சியைத் தொடர்ந்து ஒரு மணித்தியாலத்துள் மூன்று சிறிய அதிர்ச்சிகள் ஏற்பட்டன. கடந்த மூன்று மாதங்களில் இது 618 வது பூமி அதிர்ச்சியாகும்.

(பி.டி.சி)

## பட்டப்பகலில் திருட்டு

உடுப்பிட்டி, திங்கள்

கரணவாய் தெற்கு தாகவளை என்னுமிடத்தில் தங்கச்சங்கிலி திருட்டுப்போய் விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள வீடு ஒன்றில் பெற்ருேர்வெளியே சென்றிருந்தசமயம் நித்திரையாயிருந்த சிறுமியின் கழுத்திலிருந்த சங்கிலியே பட்டப்பகலில் களவுபோய் விட்டதாம்.

---

## இளம் பெண்மீது பலாத்காரம்?

### ஐவர் கைது

வவனியா, செவ்.

ஓமந்தையைச் சேர்ந்த 16 வயது இளம்பெண் 5 நபர்களால் பலாத்காரம் செய்யப்பட்டதாக வவனியா பொலிசில் புகார்செய்யப்பட்டது.

சந்தேகத்தின்மீது வவனியா பொலிசார் கே. பொன்னையா, எஸ். கந்தையா, கே. சிவராசா, எஸ். தில்லையம்பலம், வி. கதிர்காமு ஆகியோரைக் கைதுசெய்தனர்.

ஓமந்தையைச் சேர்ந்த தனிச்சநீராவியில் வசிக்கும் துரைராசா பெண் வள்ளியம்மை மேற்கண்டபுகாரைச் செய்துள்ளார். தற்பொழுது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இப்பெண்ணின் உடைகள் ரசாயன பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

பொலிசாருக்குச் செய்யப்பட்ட புகாரில், வீட்டிலிருக்கும்போது இருவர் வந்து தனது கையைப்பிடித்ததாகவும்' தான் சப்தமிட ஒருவர் ஓடிவிட்டதாகவும் பின் 3 பேர் வந்து பலாத்காரம் செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இவ்வழக்கு இம்மாதம் 4-ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

---

## பூங்காவன உற்சவம்

உரும்பராய், செவ்வாய்

உரும்பராய் கற்பக விநாயகர் ஆலய பூங்காவன உற்சவம் இன்று நடைபெறும். விசேட [illegible] கச்சேரியும், இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும்.

## அரசாங்க லிகிதர்களுக்கு வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம் தமது அங்கத்தினர் 2-ம் தர, உயர்வு பரீட்சைகளில் தேர்வு பெறுவதற்கு ஊக்கமளிக்குமுகமாக திங்கட்கிழமை, புதன்கிழமை, வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 3 மணிக்கு கச்சேரி சிற்றுண்டிச்சாலையிலும், தனது சங்க காரியாலயத்திலும், நேற்றுத் தொடக்கம் வகுப்புகளை நடத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அங்கத்தினர் அனைவரும் குறிப்பிட்ட நேர வேளையில் வகுப்பிற்கு செல்வதற்குரிய அனுமதியை யாழ். அரசாங்கஅதிபரிடம்பெற்றுள்ளதாக சங்கச்செயலாளர் திரு. சி. இரத்தினசபாபதி தெரிவித்துள்ளார்.

---

## பொலீஸ்காரர்மீது தாக்குதல்

கொழும்பு, ஆகஸ்ட் 1

கடந்த சில வாரங்களில், பொலீஸ்காரர்மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

சென்றவாரத்தில் மட்டும் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் தமது கடமையிலீடுபட்டிருக்கையில் 30 பொலிஸ்காரர் தாக்குதலுக்குள்ளாகியிருக்கின்றனர்.

அவற்றில் சிலர் கத்தியால் குத்தப்பட்டும், கொட்டனால் அடிக்கப்பட்டுமிருக்கிருர்கள்.

நுகேகொடையில் கைது செய்யப்பட்ட ஒருவன், பொலீஸ்காரர் ஒருவரைச் சோடாப்போத்தலால் தாக்கிக் கழுத்தை நெரித்தான்.

கிராமப்புறமொன்றில் தெருவில் நடந்துகொண்டிருந்த பொலீஸ்காரர் ஒருவரின் கை வெட்டப்பட்டது.

வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருந்த ஒருமனிதனைப் பிடிக்கச்சென்ற இருபொலிஸ்காரரை அவன் கத்தியால் குத்திவிட்டுத் தப்பியோடிவிட்டான். பொலிஸ்காரர் இருவரும் கடுங்காயமுற்றனர்.

மற்றும் பல இடங்களிலிருந்து பொலீஸ்காரர் மீதான தாக்குதல்பற்றித் தகவல்கள் வந்துள்ளன.

---

## ஒழுக்கமுடன் வாழவேண்டும்

கொடிகாமம், திங்கள்

''இன்று போய் நாளை வா'' என்று போர்களத்தில் நிராயுதபாணியாய் நின்ற இராவணனிடம் கூறினுன் இராமன் என்று இராமாயணம் கூறுகிறது. நிராயுதபாணியாய் நிற்பவனைக் கொல்வது ஒழுக்கமாகாது என்பதால், இவ்வாறுக முற்காலத்தவர் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தார்கள். அதுபோல் நாமும் வாழவேண்டும்.

இவ்வாறு உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் கலந்து உரை ஆற்றும்போது கூறினுர்.

உப அதிபர் அனைவரையும் வரவேற்று அதிபரின் அறிக்கையை வாசித்தார். பாடங்களிலும் விளையாட்டுக்களிலும் முதல் இரண்டு இடங்களைப் பெற்றவர்களுக்கு நீதியரசரின் பாரியார் பரிசில்களை வழங்கினுர். சாவகச்சேரி எம், பி. திரு. வி. என். நவரத்தினம் உரை நிகழ்த்தினுர். [illegible] மாணவியரின் கலைநிகழ்ச்சி இடம்பெற்றது.

# இந்திய மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## லோக சபை விவாதம்

புதுடில்லி, ஆகஸ்ட் 1

இந்திய மந்திரி சபைமீது எதிர்க்கட்சிகள் கொண்டு வந்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி இன்று லோகசபை விவாதிக்க ஆரம்பித்தது. கம்யூனிஸ்ட் உறுப்பினர் பேராசிரியர் ஹிரேன் முகர்ஜி இதைத்தாக்கல் செய்திருக்கிருர்.

அரசாங்கம் ரூபாய் மதிப்பைக் குறைத்தது நாட்டின் பொருளாதார சுதந்திரத்தை விற்பதாகும் என்றும், இந்தமுடிவு அறிவிக்கப்பட்டமுறை பார்லிமெண்ட் ஜனநாயகத்துக்கு மாறுனதென்றும் திரு. முகர்ஜி கூறினுர்.

இந்தியா அணுகுண்டு பரீட்சிக்கப் போவதாக பாகிஸ்தான்கூறுவது உண்மையா என கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு பிரதமர் இந்திரா பதிலளிக்கையில், இந்தியா அப்படிச்செய்யவில்லையென்றும், ஆனுல் பாகிஸ்தான் அணுகுண்டு ஒன்று வெடிக்குமானுல் அது சீனுவின் அணுகுண்டாகவே இருக்கும் என்றும் கூறினுர்.

''பாகிஸ்தான் இவ்வளவு விரைவில்ஒரு அணுகுண்டை வெடிப்பது சாத்தியமல்ல. அப்படி அது வெடிக்குமானுல் அது சீனக் குண்டாகத் தான் இருக்கும்'' என பிரதமர் மேலும் கூறினுர்.

---

## பகடைக்காப்பயன் ...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்து ஆட்சிக்கு வந்தவுடன் அவர்கள் சொன்னது என்னவென்ருல், செய்தது என்னவென்பதை ஆராய்ந்து பார்த்தால், எதையுமே செய்யவில்லை. இலங்கை-இந்தியப் பிரச்னையைத்தீர்த்துவிடவேண்டுமென்றஆசை அல்லது எண்ணம் அவர்களுடைய மனதிலே உதிக்கவில்லை. இந்தப்பிரச்னையைப் பல்லாண்டுகாலமாக இந்நாட்டிலே நீடிக்கவிட்டு அதை ஒரு அரசியல் பகடையாகவைத்து ஒவ்வொருதரமும் தேர்தலிலே வெற்றி பெறவேண்டும் என்று நினைத்தார்களேயொழிய இப் பிரச்னைக்கு ஒரு சமரசமான முடிவு—ஒரு சரியானமுடிவு காணவேண்டுமென்ற ஆசை அரசியல் வாதிகளின் மத்தியிலே இருந்ததேகிடையாது. 1964-வது ஒப்பந்தமொன்றை இந்நாட்டிலே உருவாக்கினுர்கள். திருமதி பண்டாரநாயக்கா அவர்கள் அந்த ஒப்பந்தத்துக்குக் காரணமாகவிருந்தார்களென்பதை நாம் மறுக்க முடியாது ஆனுல் அவ்வொப்பந்தத்தை உண்டாக்கியவுடன் அதை அமுல் நடத்துவதற்காகப் போடப்பட்ட திட்டம், அவருடைய அரசாங்கத்தையே இந்நாட்டிலிருந்து ஒழித்துவிட்டது. ஒப்பந்தம் உண்டாக்கப்பட்டது ஒரு கோலத்திலே இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் திரும்பியபோது அதற்குக் கொடுக்கப்பட்ட வியாக்கியானங்கள் மிகவும் பாரதூரமான நிலைமையிலேயிருந்தன.

[சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவித்து ஜுலை 19-ந் திகதி நடைபெற்ற பார்லிமெண்ட் கூட்டத்தில் பேசியதின் ஒரு பகுதி.]

---

## இறந்தவர்களுக்கு....

((6-ம் பக்கத்தொடர்ச்சி)

தும் அவர்கள் பிரயாணத்தைத் தாமதப்படுத்தும். இந்தமாதிரி துக்கம் அவர்களைப் பிடித்து, பௌதிகச் சூழலிலேயே கட்டி வைக்கும். இது அவர்களுக்கு நாம் செய்யும் நன்மை ஆகாது என்று ஸ்ரீ அரவிந்தர் கூறுகிருர்.

(மிகுதி அடுத்தவாரம்)

## கூட்டுறவு ...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

க. தனலட்சுமி, அன்னலட்சுமி நடராசா.

கூட்டுப் பாடல் போட்டி- (பெண்கள்) வேம்படி மகளிர் கல்லூரி, கன்னியாஸ்திரி மடம், வண்ணுர் பண்ணை நாவலர் பாடசாலை. (ஆண்கள்) நாவாந்துறை ரோமன் கத்தோலிக்கப் பாடசாலை, கோண்டாவில் சைவத்தமிழ் பாடசாலை, அர்ச் ஜேம்ஸ் மஹா வித்தியாலயம்.

---

## டாக்டர் பிரிவிற்கு பட்டினசபை அஞ்சலி

சங்கானை, திங்கள்

சங்கானை பட்டினசபையின் மாதாந்தக் கூட்டம் சென்றவாரம் பட்டினசபை தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்றது.

அண்மையில் காலஞ்சென்ற டாக்டர் கே. சி. சண்முகரத்தினம் அவர்கட்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணையை அங்கத்தவர் திரு. மா. கணேசன் பிரேரிக்க திரு. கே. செல்வராஜன் அனுமதித்தார். திரு. செல்வராஜன் இது குறித்துப் பேசுகையில், ஏழை மக்கட்கு டாக்டர் இணையற்ற சேவை செய்தாரென்றும் அவரது மறைவினுல் ஏழைகள் மிகக் கஷ்டத்திலும் துக்கத்திலும் ஆழ்ந்துள்ளனரென்றும் முக்கியமாக முற்போக்குவாதிகட்கு இது ஒரு வீழ்ச்சி என்றும் குறிப்பிட்டார். கூட்ட ஆரம்பத்தில் அன்னருக்குஇரண்டு நிமிடநேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## நிருபர்கள் தேவை

'ஈழநாடு' பத்திரிகைக்கு பின்வரும் இடங்களில் செய்தி நிருபர்கள் தேவை. பத்திரிகைத்துறை அனுபவம் விசேஷ தகைமையாகக் கணிக்கப்படும்.

நல்லூர், பளை, மூதூர், கோப்பாய், மலாலி, பண்டத்தரிப்பு,

செங்கலடி. மட்டக்களப்பு, பொத்துவில், நிந்தவூர், அம்பாறை.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

செய்தி ஆசிரியர்,
'ஈழநாடு'
த. பெ. எண். 49
யாழ்ப்பாணம்.

699

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் மேலை வீதி. 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org